REGD. M. 4642

# திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 20—6—48 | இதழ் 1

## உண்மையான மதபோதனை

—:(o):—

"நமது அரசாங்கம் முற்றிலும் மதச் சார்பற்றதாக இருக்குமென்று நமது தலைவர்கள் சொல்லுகிறார்கள். இப்போது நாம் உள்ள நிலையில், அரசாங்கமே மதக்கல்வி அளிப்பது கூடாது என்பதும் சரியானதே. எப்படி வாழ்வது என்பதுபற்றி நமது உபாத்தியாயர்கள், குழந்தைகள் மனதிலே ஒரு சரியான அபிப்பிராயத்தைப் பதியவைத்து விடுவார்களானால், அதுவே உண்மை மதபோதனையாகும் என்பதே என் அபிப்பிராயம்."

இராஜகுமாரி அமிர்தகௌரி.
(14—6—48)

## இராவண காவியத்துக்குத் தடை

16-ம் பக்கத் தொடர்ச்சி

மன், கம்பரால் ஏன் கடவுளாக்கப்பட்டார்? கம்பன் ஒரு நாட்டு மன்னனைக் கடவுளாக்கித் தருமளவுக்கு நமக்குக் கடவுட் பஞ்சம் ஏற்பட்டு விட்டதா? இராமன் கம்பரால் கடவுளாக்கப்படுவதற்கு முன், நமக்குக் கடவுளே கிடையாதா? நமக்கு ஒரு கடவுள் இருந்ததென்றால், புதிதாகக் கம்பர் எதற்காக ஒருவனைக் கடவுளாக்க வேண்டும்? அதிலும், மதநூல்களில் கூறுகின்றபடி ஒரு முனிவரையோ, தபசியையோ கடவுளாக்காமல், ஒரு நாட்டை ஆண்ட அரசனை ஏன் கம்பர் கடவுளாக்கினார்? அதே சமயத்தில், இராமனைப் போலவே ஒரு நாட்டை ஆண்ட இராவணனை, மக்கள் வெறுத்து இகழும் முறையில் ஏன் இராட்சகனாக்கினார்? இராமன் கடவுளாக ஆக்கப்படுவதற்கு அவன்பால் காணப்பட்ட நற்குணங்கள் யாவை? இராவணன் இராட்சதனாக்கப்படுவதற்கு இவன்பால் காணப்பட்ட தீய குணங்கள் யாவை? என்ற இன்னபிற உண்மைகளையெல்லாம், இராவண காவியத்துக்குத் தடை விதிக்க ஏற்பட்ட காரணங்களுடன் வைத்து ஒப்பிட்டுப் பார்த்திருக்க வேண்டும் சர்க்கார்.

இராவண காவியம் என்ற ஒரு நூல் உண்டாவதற்கு ஏற்பட்ட காரணங்கள் என்னென்ன என்பதையன்றோ முதலில் சர்க்கார் அறிந்துகொள்ள முயற்சித்திருக்க வேண்டும். இராமனைப்பற்றியும் இராவணனைப் பற்றியும் அறிந்துகொள்ள நமக்கு ஒருநூல் (இராமாயணம்) இருக்கும்போது, புதிதாக இராவண காவியம் என்ற ஒருநூல் ஏன் தோன்ற வேண்டும்? அதில் இராமனைக் குறைவாகவும், இராவணனை உயர்வாகவும் ஏன் எழுதப்பட்டிருக்கிறது? இராமனை நல்லவனாக எழுதும் உரிமை ஒரு ஆசிரியருக்கு இருக்கும்போது, இராவணனையும் நல்லவனாக எழுதும் உரிமை ஏன் இன்னொரு ஆசிரியருக்கு இருக்கக் கூடாது? என்பன போன்றவைகளையும் சர்க்கார் யோசித்திருக்க வேண்டும். வால்மீகி இராமாயணத்தில் இல்லாததும், புதிதாகச் சேர்க்கப்பட்டதுமான பல கருத்துக்கொவ்வா நிகழ்சிகளை உள்ளடக்கிய கம்பராமாயணம் நாட்டில் நடமாடும்போது, அறிவுக்கு அணிகலமாக விளங்கும் ஆராய்ச்சி நூலான இராவண காவியம் மட்டும் நாட்டில் இருக்கக்கூடாதா? இராவண காவியத்துக்குத் தடைவிதித்த சர்க்கார், அதற்குத் தடைவிதிப்பதற்கு முன் ஒன்றை யோசித்திருக்கவேண்டும். அதாவது, மக்களிடையே கருத்து வேற்றுமைகளை உண்டாக்கக் கூடிய நிகழ்சிகள் பல கம்பராமாயணத்தில் இருக்கின்றன. அதனால்தான், கம்பராமாயணக் கருத்துக்களுக்கு மாறுபட்ட கருத்துக்களை உண்டாக்கும் இராவண காவியம் போன்ற நூல்கள் உண்டாக வழி ஏற்படுகின்றது; கம்பராமாயணம் இல்லையென்றால் இராவணக்காவியமும் இருந்திருக்காது; இராவண காவியத்தை உண்டாக்கியது கம்பராமாயணம்தான்; என்பனவற்றை யோசித்துப்பார்க்குமளவுக்குச் சர்க்காருக்கு ஆற்றல் இருந்திருக்குமானால், கம்பராமாயணத்துக்கே முதலில் தடைவிதிக்க வேண்டுமென்ற நல்லெண்ணம் ஏற்பட்டிருக்கும். அங்ஙனமன்றி, எய்தவனை விட்டு அம்பை நோவதுபோல், இராவண காவியம் என்ற ஒருநூல் உண்டாவதற்குக் கருவியாய் நின்ற கம்பராமாயணத்தைத் தடை செய்யாமல், இராவண காவியத்தைத் தடைசெய்வது எந்த வகையிலும் நியாயமான செயலாகாது. இதுபற்றிச் சர்க்கார் இதுவரை யோசிக்கவில்லை என்றால், இனியாவது இந்த எண்ணம் சர்க்காருக்கு ஏற்பட வேண்டும்.

இனிக், கம்பராமாயணத்திலுள்ள கதைப்போக்கு எப்படியிருந்தாலும்—அது அறிவுக்குப் புறம்பானதாக இருந்தாலும் — அதிலுள்ள கவிநயத்தை நினைக்கும்போது, அதனைப் போற்றி வளர்க்கவேண்டுமென்ற எண்ணம் உண்டாகுமேயன்றி, அதனை, அழிக்கவேண்டுமென்ற எண்ணம் எப்படி உண்டாகும்? என்ற சில காவிய ரசிகர்களின் கருத்தைச் சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதற்காக அதற்குத் தடை விதிக்காமல் இருக்கலாம். அதனையும் நாம் தவறென்று கூறவில்லை. கம்பராமாயணத்திலுள்ள காவியச் சுவையைக் கற்கண்டெனச் சுவைக்கட்டும். அதுபோலவே இராவண காவியத்திலுள்ள கருத்துக்களை விட்டுவிட்டு அதன்பாலுள்ள காவிய நயத்தையாவது மக்கள் சுவைத்தின்புறட்டும் என்று விட்டுவிடலாமே! அதற்கு ஏன் தடை விதிக்க வேண்டும்? கம்பராமாயணத்திலுள்ள குறைகளை ஒப்புக்கொண்டு அதன் கவிநயத்தை நுகரும்போது, இராவண காவியத்திலுள்ள குறைகளையும் (இருந்தால்) ஒப்புக்கொண்டு அதன்கவிநயத்தையும்மக்கள்நுகரும்படிவிட்டு விடலாமே! கம்பராமாயணத்தைப் பார்க்கிலும் இராவண காவியம் கவிநயத்திலோ, இலக்கண அமைப்பிலோ, இலக்கியப் பண்பிலோ குறைவுடையது—தாழ்ந்தது என்று எவராவது கூறமுடியுமா?

> "தமிழ் இலக்கியத்தின் அணி கலமாய் இருக்கத் தகுந்த அருமையான காவிய நூல்"

என்று எழுத்தாளர் மாநாட்டுத் தலைவர் தோழர் நாரண துரைக் கண்ணன் அவர்களே கூறியுள்ளார். எனவே, இராவண காவியம் கவிநயம் அற்றதென்றோ, கவிநயத்துக்காக மக்கள் அதனைப் படிக்கக் கூடாதென்றோ எவரும் கூறமாட்டார்கள். ஆகையால், கம்பராமாயணம் இந்நாட்டில் இருக்கத் தகுதியுடைய நூல் என்றால், அதைப் பார்க்கிலும் பலவகையிலும் சிறந்த இலக்கிய நூலான இராவண காவியமும் இந்நாட்டில் இருக்கலாம். கம்பர், இராமனைக் கடவுளாக்கியது போல், தோழர் குழந்தை இராவணனைக் கடவுளாக்கவில்லை. வால்மீகியும் கம்பரும் பிறரும் இராவணனைக் கெட்டவன் என்று கூறியதைத் தக்க ஆதாரங்களோடு மறுத்து, இராமனே கெட்டவன், இராவணன் நல்லவன் என்பதையே இந்நூல் ஆசிரியர் விளக்கிக் காட்டியுள்ளார். இதனைக் குற்றமென்றும், ஆபத்தை விளைவிக்கக் கூடியதுமென்றும் சர்க்கார் கருதுமானால், குற்றவாளி யார்? என்பதைச் சர்க்காரால் கண்டுபிடிக்க முடியவில்லையென்றுதான் முடிவு செய்யவேண்டும். யார் குற்றவாளி? கம்பரும் வால்மீகியுமா? அல்லது தோழர் குழந்தையா? பொதுமக்களே தீர்ப்புக் கூறுங்கள்.

# அறியாமையின் சிகரம்

[பாரதி சுப்பையா]

“மேளம் பிரமாதமாயிருக்கணும். வெங்கு அய்யர்வாள், திருவீணபுரம் திருச்சிற்றம்பலத்தைக் கொண்டுவரலாமா? சரி, போய் ஏற்பாடுசெய்து அச்சாரம் ரூபாய் ஐந்து கொடுத்துவிட்டு வாரும்.”

“பந்தல் அழகாய்ப் போடவேண்டும். தெரிகிறதா வேலப்பா, ஆயிரம் பேர் உட்கார்ந்து கச்சேரிகேட்க இடமிருக்கவேண்டும். வாழை, கமுகு, முதலியன கச்சிதமாய் அலங்கரிக்க வேண்டும். நடக்கட்டும்.”

ஓய், ராமய்யர், சங்கீதத்துக்கு நமது மணிஅய்யர் கோஷ்டியை ஏற்பாடு செய்திருக்கிறேன். நாட்டியத்துக்கு நமது தங்கை பெண் லலிதாவே போதும். சரிதானே.”

“யார் அது, பெரியசாமிப்பண்டாரமா, முகூர்த்தத்துக்கு நல்ல கெட்டியான முல்லைஆரம் இரண்டு, நீளமான ரோஜாமாலை இரண்டு, மற்றும் செண்டு, கண்ணி, உதிரி முதலியனஏராளமாய்க்கொண்டுவா.”

“நல்ல சோமனைகப் பார்த்து மாப்பிள்ளைக்கு ஒருஜோடி பட்டுவேஷ்டிகள், பெண்ணுக்குக் காஞ்சிபுரத்து மயில்கழுத்துப் புடவை, அதுதான் பெண்ணின் நிறத்துக்குப் பொருத்தமாயிருக்கும், வாங்கிவிடவேண்டியதுதான், என்ன பிள்ளைவாள்.”

“வாரும் ஆச்சாரியாரே, நல்ல பொன்னிலே சங்கிலி, மாங்கல்யம், காப்பு, கொலுசு முதலியனசெய்து கொடும். சீக்கிரம் ஆகட்டும்.”

“எல்லாவற்றைக் காட்டிலும், சமையல் வெகு நேர்த்தியாய்இருக்க வேண்டும், குப்பய்யர்வாள், அதற்கு வேண்டிய சாமான்களுக்கு ஜாப்தா தயாரித்துக் கொடுத்துவிடும்.”

என்று காரைவீட்டுக் கனகரத்தினம் அய்யர் தனது வீட்டுத் தாழ்வாரத்திலே, சாய்வு நாற்காலியில் அமர்ந்துகொண்டு, வந்திருந்த ஒவ்வொருவருக்கும் வகைவகையாய்க் கட்டளை பிறப்பித்துக் கொண்டிருந்தார். அவருக்குப் பக்கத்தில் கழுத்தில் உருத்திராட்ச மணியணிந்து, மேலாடையை இடுப்பில் சுற்றி, கைகட்டி நின்று கொண்டிருந்தார் ஞானப்பிரகாசம்பிள்ளை.

“நிகழும் சர்வதாரி ஆண்டு வைகாசிமாதம் 20-ந்தேதி புதன் கிழமை காலை $7\frac{1}{2}$ நாழிகைக்குள், சுபயோக சுபமுகூர்த்தத்தில் பெரியோர்கள் நிச்சயித்தபடி செல்வச் சிரஞ்சீவி கு. அரசப்பனுக்கும் வேம்பு அம்மாளுக்கும் திருமாங்கல்யதாரணம் நடைபெறும்” என்று மஞ்சள் காகிதத்தில் அச்சடித்த அழைப்பிதழ்கள் சகலருக்கும் அனுப்பப் பட்டன. கலியாணத்துக்கு வேண்டிய சகலகாரியங்களையும் தடபுடலாகக்செய்து கொண்டிருந்தார் கனகய்யர்.

நஞ்சை நிலங்களையுடைய ஒரு குளம் அதற்குப்பக்கதிலே ஒரு விஷ்ணு ஆலயம். அதன் சன்னதியின் இருமருங்கும் வீடுகளமைந்த விசாலமான வீதி. ஒருகாலத்தில் அந்தரலோகமாய்க் காட்சியளித்த அந்த அக்கிரகாரம் இன்று குட்டிச் சுவர்களின் தொகுதியாய்க் காணப் பட்டது. அழிந்துபோன நிலையிலுள்ள அந்தப்பார்ப்பனச் சேரிக்கு கனகய்யரின் காரைவீடு சிறிதுஉயிர் கொடுத்துக் கொண்டிருந்தது.

கனகய்யர் மகாசாமர்த்தியசாலி. மழையில்லாமல் போனதற்கு ஆலயம் பழுதாய்க் கிடப்பதும், அக்கிரகாரம் பாழாய்க் கிடப்பதும்தான் காரணம் என்பதை அவ்வூர் ஜமீன்தார் அவர்களுக்குத்தக்க காரணங்களுடன் எடுத்துக்கூறி அவரைக் கொண்டு ரூபாய் 5000 செலவில் சமீபத்தில் ஆலயத்தைப் பழுதுபார்த்து, கும்பாபிஷேகம் நடத்தி, பிராமணபோஜனம் செய்து வைத்தார். மேலும் அக்கிரகாரத்தைப் புதுப்பித்து,ஓடிப்போன பிராமணர்களையெல்லாம் அழைத்துவந்து குடியேற்றினால் ஜமீன் ஒழிப்பு மசோதா சட்டமாகாமற்போய்விடும் என்று அவர் உபதேசம் செய்வதாகக் கேள்வி. தேசமெங்கும் அரிஜன ஆலயப்பிரவேசம் நடைபெற்றும் அவ்வூரில் நடைபெறவில்லை. சிவில் உரிமைத் தடை ஒழிப்புச் சட்டம் அமுலிலிருந்தும் அந்தப் பார்ப்பனச்சேரிக்குள் கீரை விற்கும் கிழவி கூட நுழையக்கூடாது. கிணற்றில் மற்றவர் தண்ணீர் எடுக்கக்கூடாது. அவ்வளவுக்கும் அய்யரின் சாமார்த்தியமே காரணம். தன் உயிருள்ளவரை மதத்தையும் சாஸ்திரத்தையும் பாதுகாப்பதென்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்தார்.

அரசப்பன் கலியாணநாள் நெருங்கியது. காலையில் மேளச்சத்தமும் கேட்டது. “சார்! வாருங்களேன், கலியாணத்துக்கு” என்று எனது வாத்தியார் நண்பர் அரிகரய்யர் அழைக்கவே, அதைமீறமுடியாமல் அவருடன் சென்றேன். நண்பர் என்னை அக்கிரகாரத்தைக் கழித்து அப்பால் அழைத்துச் சென்றார். “எந்த இடத்தில் சார் கலியாணம்?” என்று கேட்டேன். “இதோ பக்கத்தில் பிரத்தியேகமாய் அமைக்கப் பட்டுள்ள சிங்காரப்பந்தலில்” என்று கூறி அழைத்துச் சென்றார்.

பந்தலை அடைந்தோம். அங்கே கலியாணச்சடங்குகள் முறையாய், முறைமுரமாய் நடந்துகொண்டிருந்தன. பெண்களும், ஆண்களும், குழந்தைகளும் பந்தல் நிறையக் கூடியிருந்தனர். மேளவாத்தியங்கள் முழங்கிக்கொண்டிருந்தன. மலர் மாலைகளும் வாசனைப்புகைகளும் பந்தலில் மணத்தையூட்டி நின்றன. வேதியர்கள் வேதமோதினர். இவற்றையெல்லாம் பார்த்துவிட்டு, பெண்ணையும் மாப்பிள்ளையையும் பார்க்கவேண்டுமென்று இயற்கையாக எழும் ஆசையினால் தூண்டப் பட்டு மணவறையை நோக்கினேன். என்ன ஆச்சரியம்! அங்கே பெண்ணையும் காணோம். மாப்பிள்ளையையும் காணோம். கு. அரசப்பனுக்குப் பதிலாகக் குளத்தங்கரை அரசமரமும், வேம்பு அம்மாளுக்குப்பதிலாக வேப்பமரமும் நின்றன. பட்டுவேஷ்டியை அரசமரத்துக்குப், பலவர்ண சேலையை வேப்பமரத்துக்கும் கட்டியிருந்தனர். நான் திகைத்துக் கல்லாய்ச்சமைந்து திரும்ப உணர்ச்சி பெறுவதற்குள் கொட்டு முழக்கத்துடன் அய்யர் வேப்பமரத்துக்குத் தாலிகட்ட; கலியாணம் இனிது நிறைவேறியது.

இவ்வளவும் கற்பனையல்ல தோழர்களே, உண்மையில் நடந்தது. கோவில்பட்டிக்குப் பக்கத்தி

னுள்ள ஒரு கிராமத்திலே 2-6-48ல் நடந்த வைபவம் இது. ஊருக்கு மேற்கேயுள்ள குளத்தங்கரையில் பிள்ளையார் கோவிலுக்குப் பக்கத்தில் ஜோடியாய் வளர்ந்துள்ள அரச மரத்தையும் வேப்ப மரத்தையும் சுற்றி ஒரு மேடை கட்டிப் பந்தல் அமைத்து, புஷ்பம் அலங்காரம் மேள தாளத்துடன் கலியாணம் நடத்தி வைக்கப்பட்ட செய்தி உண்மை. (பெயர்கள் கற்பனை) கலி காலத்திலே இதென்ன கேலிக்கூத்து என்கிறீர்களா?' அதைப்பற்றிக் கனகய்யருக்கு என்ன கவலை? அவருடைய மதம், சாஸ்திரம் அவருக்குக் கட்டளையிட்டபடி, குல தர்மம் செழிக்க இந்த 'சத் காரியத்தை'ச் செய்து முடித்தார்.

அய்யருக்குக் கல்யாணமாகிப் பத்து வருடங்களாகியும் புத்திர சந்தானம் உண்டாகவில்லையென்ற கவலையால் பலவிதமான முயற்சிகள் செய்து பார்த்தார். நவக்கிரகசாந்தி, சனீஸ்வர பூஜை, இஷ்டதேவதா ஆராதனை முதலியன எல்லாம் செய்து முடித்தார். "கஷ்டகாலத்திலே கஞ்சிக்கில்லையென்று ஏழைகள் கதறிக் கேட்டபோது களஞ்சியத்திலே உள்ள நெல்லை ரூபாய்க்கு 1படி என்று கை கூசாமல் அளந்தானே, கர்ம சண்டாளன். அவனுக்கு எப்படிக்குழந்தை பிறக்கும்" என்று ஊரில் ஏற்பட்ட பழியையும் பாவத்தையும் துடைப்பதற்காக ராமேஸ்வரத்துக்குத் தம்பதிசமேதராய்ப் போய்விட்டு வந்தார். சிவபக்தராயிருந்தும் துவேஷம் பாராட்டக் கூடாதென்று எண்ணி பெருமாள் கோவிலுக்கு அர்ச்சனைக்குக் கொடுத்து ஸ்ரீராமநவமியை 10நாட்கள் பஜனை, பாராயணம், சுண்டல் பிரசாதங்களுடன் சப்பிரமமாய்க் கொண்டாடினர். கடைசியில் அரச மரத்தை 40நாள் சுற்றினால் சந்தான விருத்தி யுண்டாகும் என்று கூறிய ஆரிய சாஸ்திரப்படியும் நடக்கத் தீர்மானித்தார்.

அந்த ஊரில் அரசமரமும் வேப்ப மரமும் ஜோடியாய் இல்லை. குளத்தங்கரை மரத்துக்குக் கலியாணம் ஆகாமலிருந்தது. கலியாணம் செய்யப்பட்ட மரங்களைச்சுற்றினால்தான் பலன் உண்டு என்று சாஸ்திரம் கூறுகிறதாம். ஆகவே குளத்தடி 'அரசப்பனுக்'குக் கலியாண யோகம் அடித்தது.

கலியாணத்துக்கு அய்யர் ஒரு காசும் செலவிடவில்லை. ஞானப்பிரகாசர் பிள்ளையைக்கூப்பிட்டு, 'ஓய், இந்த அரசும், வேப்பும் உமது தகப்பனர் வைத்துப் பயிரிட்டது. நீர் அதற்குக் கலியாணம் செய்து வைக்கவேண்டும். இல்லாவிட்டால் வைத்ததிற் புண்யம் இல்லை. குடும்பம் விருத்தியாகாது. வைகாசி மாதம் 20ம் நாள் நல்லமுகூர்த்தம், ஏற்பாடு செய்து விடுவோமே" என்றார். உடனே பிள்ளையவர்களும் இசைந்தார்கள். பிறகு கேட்பானேன். பிள்ளைவாள் செலவிலே, அய்யர்வாள் ஆதரவிலே, மேளதாளத்துடன் கலியாணம் ஜாம்ஜாமென நடந்தேறியது.

கலியாணம் நடந்து முடிந்தவுடன் பிள்ளைவரம் வேண்டி நின்ற அய்யரும் ஆச்சியும் முதலில் அரச மரத்தைச் சுற்றி வந்தார்கள். பின்பு மற்றவர்கள் சுற்றினார்கள்.

* * *

மற்றைய நாடுகளிலே பெண்கள், குதிரை மீதேறிப் பந்தய ஓட்டம் ஓடுகிறார்கள். கப்பல் ஓட்டிக் கடலைக் கடக்கிறார்கள். பந்தய ஆட்டத்திலே பந்தடி மட்டையை லாவகமாய்ச் சுற்றுகிறார்கள். தொழிற்சாலையில—யந்திரத்தைச் சுற்றுகிறார்கள். மோட்டார் ஓட்டி உலகத்தைச் சுற்றுகிறார்கள். ஆகாய விமானத்தை யோட்டி வானவீதியைச் சுற்றுகிறார்கள். நமது நாட்டிலும் பெண்கள் சுற்றுகிறார்கள், நாள்தோறும்அரசமரத்தை.

இதே நவீன நாகரீககாட்களிலும் இது நடைபெற்று வருகிறது, கிராமங்களில் மாத்திரமல்ல, மின்சார ஒளிவீசும் நகரங்களில் கூட.

பகுத்தறிவுக் கதிர் வீசுகின்ற இந்த நாகரீக நாட்களிலே பார்த்தவர்கள் சிரிப்பார்களே என்ற வெட்கம் சிறிதுமின்றிப் பாலனைவேண்டி மரத்தைச் சுற்றுகிறார்கள் என்றால், மதமும், சாஸ்திரமும், மூட நம்பிக்கையும் 'எக்ஸ்ரே' ஒளிக்கதிர்கள் கூட ஊடுருவ முடியாதபடி எவ்வளவு கெட்டியாய், ஆழமாய் அவர்கள் நெஞ்சில் வேர் விட்டிருக்கிறது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

இதில் என்ன தவறு? யாருக்கு என்ன நஷ்டம்? என்று கேட்கலாம் நண்பர்கள். அரசமரத்துக்குக் கலியாணம் செய்விப்பது, பின்பு அதனைச் சுற்றுவது என்பது தனிப்பட்டவரைச் சார்ந்ததல்ல, பகிரங்கமாக நடக்கிறது. அதன் விளைவு மனித சமுதாயத்தையே கடுமையாகப் பாதிக்கிறது. ஆதலின் அது தவறு மாத்திரமல்ல, தற்கொலை; நஷ்டம் மட்டுமல்ல, நாசவேலைஎன்று கூறுகிறோம். எப்படியெனில், அய்யர் அரசமரத்துக்கு ஆடம்பரமாய்க் கலியாணம்செய்துவைத்தது அறிவு விளக்கம் பெறாத பாமரரிடையே ஒரு பிரமிப்பை உண்டு பண்ணுகிறது. அந்தப் பிரமிப்பு "அரசமர மகாத்மியம் உண்மையாயுமிருக்கலாம், இல்லாவிட்டால் இப்படியெல்லாம் செய்வார்களா?" என்று நம்பச் செய்கிறது. அந்த நம்பிக்கை பகுத்தறிவை மாய்த்துப் பக்தியை ஊட்டுகிறது. பக்தி மனிதனைப் பைத்தியமாக்குகிறது, மரக்கட்டையாக்குகிறது, நடைப்பிணமாக்குகிறது. இது தற்கொலையைக் காட்டிலும் கொடியதல்லவா?

அரசமரத்திலே மகிமை காணும் அறியாமை, கண்ணிலே கண்டதை மறந்து காணாததை நம்பச் செய்கிறது. சரித்ர சாஸ்திரத்தை விட்டு மூட சாஸ்திரத்தை நம்பச் செய்கிறது. விஞ்ஞானத்தை விட்டு அஞ்ஞானத்தை ஏற்கச் செய்கிறது. பகுத்தறிவை விட்டுப் பாவ புண்ணியத்தை நம்பச்செய்கிறது. இயற்கை விதியை மறந்து தலைவிதியை நோகச் செய்கிறது. இவ்வுலகை வெறுத்து மறுவுலகைத் தேடச் செய்கிறது. இது மானக்கேடு மட்டுமல்ல கொடிய மனக்கேடும் அல்லவா?

அந்நியரிடமிருந்து விடுதலை பெற்ற நம் நாடு முன்னேற வேண்டுமானால் அறியாமை ஒழிய வேண்டும், கல்வி பெருகவேண்டும், பகுத்தறிவு மேலோங்க வேண்டும் என்று ஒரு பக்கம் மேடைகளிலே முரசு முழக்கக் கேட்கிறோம். அதே சமயத்தில் அதற்கு விலக்கெடுப்பது போன்று மறுபுறத்தில் அறியாமையின் சிகரத்தை எட்டிப் பிடிப்பதுபோல்அரசமரத்துக்குக்கலியாணங்கள் நடைபெற்று வருவதைக் காண்கின்றோம். எனவே, அறிவுப்பள்ளம் நிரம்ப வேண்டுமானால் நம் நாட்டிலுள்ள அறியாமைச் சிகரங்கள் அனைத்தும் தகர்க்கப்பட்டேயாக வேண்டும். அந்தத் தைரியம் நம் நாட்டிலுள்ள அனைவருக்கும் உண்டாகவேண்டும்.

✻

# வெட்கப்படுகின்றோம்

சர்க்கார் நிதி அமைச்சர் தோழர் ஆர். கே. சண்முகம் அவர்கள், ஸ்டர்லிங் இருப்புப்பற்றிய பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்காக இப்போது இலண்டனுக்குப் போய் இருக்கிறார். இந்தச் சமயத்தில் அவருக்கு இலண்டனில் ஒருநல்லவாய்ப்புக்கிடைத்தது. தமிழ் மக்கள் பெருமையும் மகிழ்ச்சியும் அடையக்கூடிய விதத்தில் அந்த வாய்ப்பு அமைந்தது. அதாவது, இலண்டனிலுள்ள தமிழ்ச்சங்கத்தில் பேசும் வாய்ப்புத் தோழர் சண்முகம் அவர்களுக்குக் கிடைத்தது. எனவேதான் இதனை ஒரு அரிய வாய்ப்பு என்று கூறினோம். எனவே இலண்டனிலுள்ள தமிழ்ச்சங்கத்தில் தோழர்சண்முகம் அவர்கள் பேசியபோது,

"எல்லாப்பொருளும் இதன்பால் உள, இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லையால்" என்ற முதுமொழிக்கிணங்கிச் செவிக்கும் வாய்க்கும் சிந்தைக்கும் இனியவாய சிறந்த சொற் செறிவும், உயர்ந்த பொருட் பொலிவும் பொருந்தி விளங்க எழுதப்பட்ட நமது தமிழ் நூல்களிற் காணப்படும் அமிழ்த மயமான அற ஒழுக்கங்களையும், பொருள் நுணுக்கங்களையும் அறிந்து நுகர்ந்து மகிழ்வடைவதே மக்கட் பிறப்பின் மாண் பயனாகும். கண் பெற்றிருந்தும் காணாத மக்களைக் குறித்தும், காது பெற்றிருந்தும் கேளாத மக்களைக் குறித்தும் ஏசுநாதர் விவிலிய நூலுட் கூறிப்போயுள்ளவை பலரும் அறிந்தவையே. அக்குறிப்புகளைப்போன்ற பலவற்றை நந்தமிழ் நூல்கள் பலவற்றுட் பரக்கக் காணலாம். உறுப்புக்களான் மக்களை ஒத்துப், பண்பினால் அவரை ஒவ்வாதவரும், ஊனும் உடையும் பிறவுமுடையராயினும், உண்மையை அறிய அஞ்சுபவரும் மக்கள் அல்லர் என்பது நமது தமிழ் ஆன்றோர்கொள்கை.

உண்மைகளை உள்ளபடி கூறி மக்களை நல்வழிப்படுத்தவல்ல ஆற்றலோடு கூடிய தமிழ் அறிஞர் பலர் அஞ்ஞான்று இருந்தாராயினும், அவருட் பெரும்பாலார் பொருள் வருவாய்க்கு வழியில்லாமையாற், செல்வர் சிலரை அடுத்து, அவரைப் பலவகையாலெல்லாம் புகழ்ந்து பாடிக் காலங்கழித்து வந்தார்கள். இத்தகைய இரங்கத்தக்க நிலை இப்போதும் முற்றும் ஒழிந்து போயிற்றென்று சொல்லுதற்கில்லை. இஞ்ஞான்றும் கற்றறிந்தவர்கள் என்று காணப்படுவோருட் பலர் தம்வறுமை கருதியோ அல்லது உண்மை உணர்ச்சி இல்லாத சிலரின் புகழுரைகளைப் பெற விரும்பியோ, அல்லது தாம் அல்லாத ஏனையோரெல்லாம் ஒன்றும் அறியாத முட்டாள்களென நினைத்தோ தம் வாய்க்கு வந்தவாறெல்லாம் முன்னுக்குப் பின் முரணாக உள்ளதை இல்லையென்றும் இல்லதை உள்ளதென்றும், உண்மை நூல்களிற் காணப்படுவனவற்றை நீக்கியும், காணப்படாதனவற்றைப் புனைந்தும் பேசிவிடுகின்றனர். இத்தகைய அருவருப்பான விரிவுரைகளைக்கேட்டுக் கொண்டிருக்கும் அவைக்குழுவினரும் அவர் பேசியதில் உண்மைக்கு மாறான பல புனைந்துரைகள் காணப்படுகின்றனவே என்று அறியும் ஆற்றலில்லாத இயல்போடுகூடினவர்களாய்க் கைகொட்டி ஆரவாரஞ் செய்துவிடுகின்றனர். இவ்வித அறியாமையைக்கண்டுஉண்மையை உள்ளபடி சொல்லவேண்டுமென்ற கருணையுடன் எவரேனும் முன்வருவார்களானால், அவர்களை அங்ஙனம் பேசவிடாது தடுப்பதற்கு எத்துணை இயலுமோ அத்துணை இடர்களும் செய்து விடுகின்றனர். ஐயகோ! இது பெரிதும் இரங்கபாலது. நிற்க,

கற்றார் முதற் கல்லாதார் ஈறாகச் சிறு மகாரும் பெண்டிரும் உட்பட எல்லாராலும் பேசப்படுவதேமொழியெனப்படுமன்றி, நூல்களிற் கற்றார்பால்மட்டும் வழங்குவது மொழியெனப்படாது. வல்லோசை இல்லாத நந்தமிழ் இத் தமிழ்நாட்டின்கண் இன்னகாலத்தில் இருந்துதான் பேச்சுவழக்கில் வந்ததென்று எவராலும் ஆராய்ந்தறிய முடியாததாய்த், தன் இளமை குன்றாது, கல்லாதாராலும், கற்றாராலும், சிறுமகாராலும், பெண்டிராலும் பேசப்பட்டு வருகின்றதென்பதை எவரே அறியாதார்!

இனித், தமிழ்மொழியின் சொற்களும் சொற்றொடர்களும் இப்படித்தான் பேசவும் எழுதவும் படல் வேண்டுமென்னும் முறைகளையும் நுட்பங்களையும் நன்னிதின் ஆராய்ந்து, அவைகளை ஒரு வரம்பிற்குட்படுத்தி ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னேயே பல சிறந்த இலக்கண நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. தொல்காப்பியத்திற்கும் முன்பே எழுதப்பட்ட இலக்கண நூலாசிரியர்களின் கருத்தோடிணங்கி அவர் தம் சொற்களையும் சொற்றொடர்களையும் வேறுபடுத்தாது, அவர்க்குப் பின்வந்த "தொல்காப்பிய" ஆசிரியர் தம் காலத்து வழக்கும் உடன் சேர்த்துத் "தொல்காப்பியம்" என்னும் நுண்பொருள் விரிந்ததோர் இலக்கண நூலை இயற்றினார். தொல்காப்பியத்திற்குப்பின் தோன்றிய பவணந்தி முனிவரும் தொல்காப்பியர் கருத்தோடிசைந்து "நன்னூல்" என்னும் ஓர் அரிய இலக்கண நூலை இயற்றினார். இவ்வகையானே, நம் பண்டைத் தமிழர் அவ்வக்காலத்து இயல்பிற்கு இசைகின்றவிடத்தும், தம் முன்னாசிரியர் கருத்தோடு மாறுபடாமற், சொற்களையும் சொற்றொடர்களையும் ஒழுங்குபடுத்தி இலக்கண நூல்கள் எழுதிவைத்தமையாலன்றோ நந்தனித் தமிழ் பண்டை நாள் தொட்டு இன்றை நாள்வரையும் சிறிதும் வேறுபடாமற் பேசவும் எழுதவும் எளிதாய் இருக்கின்றது.

இனி, ஆரிய மொழியிற் பழைய முனிவரால் இலக்கண நூலுட்கூறப்பட்டுள்ள சொற்களையும் சொற்றொடர்களையும், அவர்க்குப் பிற்காலத்து வந்தோர் வேறு திரித்துப் பலவேறு வகைப்பட வழங்கினமையின், அவற்றிற்கேற்பப் பிற்காலத்து இலக்கண நூல்கள் எழுதப்பட்டன. பாணினீயம் எழுதப்பட்ட காலத்தில் ஆரியமொழி ஒருதன்மைத்தாயுப், காளிதாசர் காலத்து வேறு தன்மைத்தாயும் இருந்தது. இங்ஙனம் பாணினீயம் எழுதப்பட்ட காலத்தில் வழங்கிய ஆரிய மொழியையும், பாணினீயத்திற்குப் பிற்பட்ட காலத்தில் வழங்கிய சமஸ்கிருத மொழியையும் உற்று நோக்கின், அவை ஒன்றற்கொன்று தொடர்பின்றி வெவ்வேறு மொழி

போற் காணப்படுகின்றன. இங்ஙனமே, ஆங்கில மொழியும் "சாசர்" காலத்தில் ஒருவகையாயும், "கேட்மன்" காலத்தில் வேறொரு வகையாயும், இப்போது மற்றொரு வகையாயும் எழுதப்பட்டிருக்கின்றது.

இலக்கண நூல்களைப் பண்படுத்திச் செவ்வையாக எழுதி மொழிகளை ஒரு வரம்பிற்குட்பட நிலை நிறுத்துவதற்கு மக்களின் நாகரிகமும் இன்றியமையாது வேண்டப்படும். எவ்வாறெனின், ஆரியர் தமக்கென ஊர் ஒன்றின்றி, ஊணும் உடையுமின்றி, ஊர் ஊராய்த்திரிந்து துன்புற்றமையின், அவர்கள் இடரின்றி ஓர் ஊரில் அமர்ந்து அமைதியோடு ஆராய்ந்து, தம் முன்னோர் வகுத்த சொற்களையும், சொற்றொடர்களையும் ஒப்பிட்டு நோக்கிப் பார்த்து இலக்கண நூல்கள் எழுதுவதற்கு நேரமும், செல்வமும், கல்வியும் போதாமையின், ஆரிய மொழியில் அவ்வக்காலத்து வேறுபட்ட அவ்வத்திரிபுகளுக்கு ஏற்ப இலக்கிய இலக்கணங்கள் எழுதுவாராயினர். அதனால் அவ்ஆரிய மொழி ஒவ்வொரு காலத்தும ஒவ்வொரு மொழியாய் வேறு வேறு திரிந்து ஒன்றற்கொன்று இயைபின்றிக்கடைசியில் இறந்துபட்டது.

அன்றியும், இந்தியாவில் வந்து குடியேறிய ஆரியர்க்கு எழுதத் தெரியாதென்றும், அதனால் அவர்கள் தமக்குத் தெரிந்த உரைகளையும் பாட்டுகளையும் நெட்டுருச் செய்து நினைவில் வைத்துக்கொண்டார்களென்றும், அதனால் அவர்களுடைய நூல்களுக்குக் காதாற் கேட்கப்படுவது என்பதன் பொருளில் "சுருதி" என்னும் பெயரும், நினைவில் வைக்கபபடுவது என்பதன் பொருளில் "ஸ்மிருதி" என்னும் பெயரும் வழங்கி வந்தனவென்றும்; அக்காலத்திருந்த தமிழர்கள் எழுத்தெழுதவும், கணக்குப்போடவும் வல்லவர்களாய் இருந்தார்களென்றும், தமிழர்க்குப் பழைய நூலாகிய தொல்காப்பியத்தில் எழுத்துக்கள் எழுதும் முறைகள் சொல்லப்பட்டிருப்பதே அதற்குப் போதிய சான்றாகுமென்றும்; ஆகவே, தமிழரே ஆரியர்க்கு எழுத்தெழுதும் முறையினையும், கணக்குப்போடும் முறையினையும் கற்பித்துக் கொடுத்தனரென்றும் சரித்திர (வரலாற்று) ஆராய்ச்சி நூல் வல்லார் சொல்லுகின்றார்கள். மற்றை நாட்டவர்களெல்லாம் விலங்கினங்களைப்போல் இருந்த பண்டை நாளில் எழுதவும் கணக்குப்போடவும் தெரிந்திருந்த நந்தமிழ் மக்களை நாகரிகமற்றவர் என்று கூற எவரே முன்வருவர் அன்பர்களே!

அன்றியும், "சாந்தோக்கியம்," "பிருகதாரிணியம்" முதலிய பழைய உபநிடதங்களில் ஆரியப் பார்ப்பனர், அஜாத சத்ரு முதலான ஏனை வகுப்பினர்க்குரிய அரசர்பாற் சென்று உயர்ந்த மெய்ப்பொருள்களைக் கேட்டுத் தெளிந்தாரென்றும், அங்ஙனம் அவற்றை அவ்வாரியப் பார்ப்பனருக்கு அவ்வரசர்கள் அறிவித்த பிறகு, "இம்மெய்ப் பொருள்களை ஆரியப் பிராமணர் எவரும் இதற்கு முன் அறியார். இவை எம்மவர்க்கே உரியனவாய் இருந்தன; இவற்றை முதன் முதல் யாமே உமக்கு அறிவுறுத்தினேம்" என்று அவ்வரசர்கள் கூறினார்களென்றும் சொல்லப்பட்டிருக்கின்றனவென அறிவுடையோர் கூறுகின்றார்கள். அஃது அங்ஙனமாகவும், ஆரியரே பிறர்க்கு மெய்ப்பொருள்களை அறிவுறுத்தினார்களென்று கொள்வது யாங்ஙனம் பொருந்தும்?

இன்னும், ஆரியர் இந்தியாவுக்கு வருமுன் தெற்கே குமரி முனையில இருந்து பெலுஜிஸ்தானம் வரை பரவியிருந்தவர் தமிழரேயென்றும், தமிழ் மொழியே முதன்மையான மொழியென்றும், தமிழ் மொழி ஒன்றே நாளடைவில் திரிபடைந்து தெலுங்கு, கன்னடம், மலையாளம், பிராகுவி, பாலி, துளுவு, தோடா முதலான மொழிகளாய் மாறிவிட்டனவென்றும், தமிழ் மொழியை நன்கு ஆராய்ந்து நடுநிலை திறம்பாது Dr. Caldwell என்ற துரைமகனார் எழுதிய "The comparative grammer of the Dravidian Languages" என்ற நூலிலும், சீனிவாச அய்யங்கார் அவர்கள், M. a., தாமெழுதிய "Tamil Studies" என்ற நூலிலும் நன்கு விளக்கிக் காட்டியிருக்கின்றனர்.

இனி, வடமொழியினிடத்து மிகுந்த பற்றுவைத்து அதனை உயர்த்திக் கூறுவோர் அம்மொழியைத் தம் பெண்டிர் பிள்ளைகள் முதலான எல்லார்க்கும் கற்பித்து அம்மொழியிலேயே அவருடன் பேசுதல் வேண்டும்; அதுவே அதன்பால் வைத்த உண்மைப் பற்றுதலுக்கு அழகாகும். அன்றி, வடமொழியைத் தம் சுற்றத்தார் எல்லாரோடும் முற்றும் பேசத்தெரியாத அவர், அதன்பாற் பாராட்டும் பற்று வெறும் போலியே அல்லாமல் ஏதும் பயனுடையதாகக் காணப்படவில்லை. எனவே, உலக வழக்கிற்குப் பயன்படாத வடமொழி மேல் வைத்த போலிப்பற்றால் வளம் நிறைந்த தூய தமிழைக் கெடுக்க முந்துதல் அறிவுடைமைக்குச் சிறிதும் முறையாகாது.

இன்னும், பிறமொழிகளில் இருக்கும் நூல்களைத் தமிழில் மொழிபெயர்ப்பார் சிலர் தமிழில் திருந்திய அறிவு விளங்கப் பெறுமையால் தாம் மொழி பெயர்க்கும் நூல்களிலுள்ள சொற்களையும் சொற்றொடர்களையும் பின் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிற தொடர் மொழிகளைப் போலவே நெடுக எழுதிவிடுகின்றனர். அதாவது, "ப்ரத்யட்சமாகத் தோணுகிற சர்வ ஜகத்தையும் மித்யா எனச் சொல்லும் ஏகாத்ம வாதிகள் தமக்குப் பிரமக்ஞானம் லயித்துவிட்டது என்பர்" என்றும், "ஒன்றிற்குத்தாத்பர்யம் சத்தியார்த்தத்திலிருக்குமே ஒழிய லக்ஷியார்த்தத்திலிருக்க முடியாதென்று கூற முடியுமா" என்றும் தமிழிற் பிறமொழிகளைச் சேர்த்து எழுதுவதால் இக்காலத்துத் தமிழ் நடை தன் இனிமையும் தூய்மையும் பழைமையும் குன்றியிருப்பதை எவரே உணராதார்!

தமிழ் அல்லாத மற்ற மொழிகளில் வருத்தப்பட்டுச் சொல்லும் சொற்களும், கோபம் துன்பம் வந்தாற் பிறக்கும் உரத்த ஓசைகளும், இளைத்த ஒலிகளும் நிரம்பிக் கிடத்தலால் அவையெல்லாம் செயற்கை மொழிகளென்றும், தமிழில் வருத்தமின்றி இயல்பாற் பிறக்கும் சொற்களே நிறைந்து, கோபத்தாற் பிறக்கும் வெடிப்போசையும், துன்பத்தாற் பிறக்கும் இளைப்பொலியும் இன்றி, எல்லாம் இனிய குணத்திற் பிறக்கும் மெல்லோசைகளாய் இருத்தலின், தமிழ் இன்பவடிவாய்விளங்கும் இன்பம் வாய்ந்த மொழியாம் என்பதை அன்பர்கள் கருத்திற் பதிய வைத்து அதனை வளரச் செய்வதற்கான எல்லா முயற்சியுங் குறைவறச் செய்தல் வேண்டும்.

எனவே, உலகில் நாம் தமிழ் மக்களாய்ப் பிறந்ததற்கு அடையாளமாக

நம்மைப்பற்றியும் நம் மொழியைப் பற்றியும் நம் கொள்கையைப் பற்றியும் நன்றாக ஆராய்ந்து கொள்ளல் இன்றியமையாத தொன்றாம். ஆகலாற், பழமை தொட்டு நாகரிகத்திற் சிறந்த தமிழ் நன்மக்கள் வழியிற் றோன்றிய நம்மனோர், நமது சிறப்பையும் நாகரிகத்தையும் நிலைநாட்டி, அவற்றைப் பிறரும் பின்பற்றுமாறு செய்வார்களானால், அவர்கள் தமக்கும் பிறர்க்கும் பயன்பட்டவராய்ப் புகழ்ஓங்கி வாழ்வர்."

என்றுதான் பேசியிருப்பார் — தமிழ்மொழியைத்தாய்மொழியாகக் கொண்ட தோழர் சண்முகம் அவர்கள் தமிழ்மொழியின் சிறப்பைப்பற்றியும், அதன் தொன்மை— இனிமை பிறமொழிகளின் உதவியின்றித் தனித்தியங்கும் தனிச்சிறப்பைப்பற்றியும் மேற்கண்டவாறுதான் பேசியிருப்பார் என்று நீங்கள் கருதுவீர்கள்.

தமிழ்நாட்டிலிருந்து இங்கிலாந்து முதலான மேல்நாடுகளுக்குப் போகின்றவர்களை நோக்கி அங்குள்ளவர்கள், "உங்களுடைய நாட்டுக்கும், கலை, நாகரிகங்களுக்கும் சிறப்புத் தரும் நூல்கள் என்னென்ன" என்று கேட்கும் போதெல்லாம், அவர்கள், "எங்களிடம் பாகவதம்—பகவத் கீதை — இராமாயணம் —பாரதம் —ஆகமம், உபநிஷத் ஆகிய ஒப்புயர்வற்ற நூல்கள் பல இருக்கின்றன" என்று கூறிப் பூரிப்படைவது போலத், தோழர் சண்முகம் அவர்கள் கூறியிருக்கமாட்டார் என்றும், அவர், "எங்கள் நாட்டுக்கும், கலைக்கும், நாகரிகத்துக்கும் சிறப்புத்தரும் நூல்கள், இதுவரை நீங்கள் அறியாதது — அறிவிக்கப்படாததுமான பல பழம்பெரும் நூல்கள் நம்மிடம் உள்ளன. அவை:— திருக்குறள்— தொல்காப்பியம் — புறநானூறு — அகநானூறு— கலித்தொகை-கலிங்கத்தப்பரணி —ஐங்குறுநூறு-சிலப்பதிகாரம்-சீவகசிந்தாமணி போன்ற இன்னும் பல தனித் தமிழ் நூல்கள், நம்மிடம் உள்ளன" என்று கூறித் தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும் பெருமையும் மகிழ்ச்சியும் தரக்கூடிய முறையில் பேசியிருப்பார் என்றும் கருதுவீர்கள். ஆனால் நமது அன்பர் சண்முகம் அவர்கள் அந்தப் பெருமை தரும் பணியினைச்செய்து, அவருக்குக் கிடைத்த அரியவாய்ப்பினை நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பதை வருத்தமும் வெட்கமும் கலந்தகுரலில் கூற வேண்டியிருக்கிறது.

இலண்டனிலுள்ள தமிழ்ச் சங்கத்தில் பேசிய தோழர் சண்முகம் அவர்கள்,

"பிறமொழிப் பதங்களின்றி எந்த மொழியும் வளர்ச்சி அடைய முடியாதாகையால், பிறமொழிப் பதங்களைச் சேர்த்துக்கோள்வதில் தமிழர்கள் வெட்கப்படக்கூடாது"

என்பதாகப் பேசியிருக்கிறார். இவ்வாறு சண்முகம் அவர்கள் பேசினார் என்பதைச் செய்தித் தாள்களில் படித்தவுடன் உண்மையாகவே நாம் வெட்கப்பட்டோம். தோழர் சண்முகம் அவர்கள் இத்தகைய தனக்கு மிஞ்சிய தன்னால் ஆகாத பணியில் ஏன் ஈடுபட்டார் என்று வருத்தமும் அடைந்தோம். அவர் எந்த வேலைக்காகப் போனாரோ, அந்த வேலையை மட்டும் சரிவர முடித்துக்கொண்டு திரும்பியிருக்கலாமே என்றும் எண்ணினோம்.

தமிழில் பிறமொழிச் சொற்களைச் சேர்ப்பதில் தமிழ் மக்கள் வெட்கப்படக் கூடாதென்ற வெட்கங்கெட்ட பேச்சை அவர் பேசியிருக்க வேண்டியதில்லை. உலகில் உள்ள மொழிகளில் தமிழ் மொழி ஒன்றுதான், பிறமொழிச்சொற்களை எந்த ஏதுவைக் கோண்டும் இரவல் வாங்காமல் தனித்து இயங்கக் கூடிய தென்பதையும், எந்தவிதமான புதுச் சொற்களுக்கும் தமிழில் சொற்களை ஆக்கிக்கொள்ளும் திறமை தமிழ்மொழி ஒன்றுக்கு மட்டும் உண்டு என்பதையும் தோழர் சண்முகம் அவர்கள் அறியாமல் பேசியது கேட்டு நாம் உண்மையாகவே வெட்கப்படுகின்றோம்.

"தமிழ் ஒன்றுதான் பிறமொழிச் சொற்களின் உதவியின்றித் தனித்தியங்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளது" என்று கூறிய மேல்நாட்டறிஞர்களான டாக்டர் போப், டாக்டர் கால்ட்வேல் முதலானவர்கள் இன்று இருந்தால், இலண்டனில் தோழர் சண்முகம் அவர்கள் பேசியதைக் கேட்டு, அவர்களும் வெட்கப்பட்டிருப்பார்கள்.

இலண்டனிலுள்ள பெரிய நூல் நிலையத்தில், விவிலிய (Bible) நூலுக்குப் பக்கத்தில், இரண்டாவது நூலாக இடம் பெறும் பேற்றைப் பெற்றுள்ள திருக்குறள், தோழர் சண்முகம் அவர்களைக் காண நேர்ந்து—அதற்குப் பேசவும் வாயிருந்தால், அதுவும் அவரின் அறியாமையைக் கண்டுவெட்கப்பட்டுக் கைகொட்டி நகைத்திருக்கும்.

"உங்கள் போன்றவர்கள் என்னைப்பற்றி இப்படியெல்லாம் தப்பும் தவறுமாகக்கூறுவதாலேதான், நான் இன்று இந்தக் கீழ்நிலையை அடைய நேரிட்டது — 'தண்ணீரை' ஜலம் என்றும், 'சோறு' என்பதைச் சாதம் என்றும், 'மலர்' என்பதைப் புஷ்பம் என்றும், 'கண்கூடு' என்பதைப் பிரத்தியட்சம் என்றும், 'கறி' என்பதைப் பதார்த்தம் என்றும், 'சாறு' என்பதைச் சாம்பார் என்றும், 'மிளகுநீர்' என்பதை ரசம் என்றும், 'முதுகுன்றம்' என்பதை விர்த்தாசலம் என்றும், 'மறைக்காடு' என்பதை வேதாரண்யம் என்றும், தமிழ் மக்களால் மிக எளிதாகச் சொல்லக்கூடிய தூய தனித் தமிழ்ச் சொற்கள் எல்லாம் வடமொழிச் சொற்களாக ஆக்கப்பட்டுவிட்டன" என்று, தோழர் சண்முகம் அவர்களைப் பார்த்துத் தமிழ் மொழியும் வெட்கப்பட்டிருக்கும்.

விஞ்ஞான முறையால் உண்டாகும் புதுப்புதுச் சொற்களுக்குக் கூடத், தனித் தமிழ்ச் சொற்களைக், கருத்து மாறுபடாமல் உண்டாக்கிக் கொள்ள முடியும் என்பது தமிழ் மொழி வல்லுனரின் முடிந்த முடிபாகும். இந்த நிலையில் நமது மதிப்புக்குரிய தோழர் சண்முகம் அவர்கள், தமிழில் பிறமொழிச் சொற்களைச் சேர்ப்பதில் தமிழ் மக்கள் வெட்கப்படக்கூடாதென்று பேசியது கேட்டு, நாம் உண்மையாகவே வெட்கப்படுகின்றோம். இதனைப் படித்த பின்னர் தோழர் சண்முகம் அவர்களும் வெட்கப்படுவார் என்பதில் ஐயமில்லை, அவரும் தமிழ் மகன் என்ற காரணத்தால்.

# திராவிட நாடு

காஞ்சி] 20—6—48 [ஞாயிறு


## ஏழாவதாண்டு

—●—

"திராவிடநாடு" இதழுக்கு ஆறு ஆண்டுகள் முடிந்து, ஏழாவது ஆண்டு தொடங்கியிருக்கிறது. கடந்த ஆறாண்டுகளாகப் பொதுமக்களின் நலன் கருதி உழைத்த "திராவிடநாடு" இனியும் அப்பணியினைத் தொடர்ந்து நடத்த உங்கள் ஆதரவையும் ஒத்துழைப்பையும் நாடி உங்களிடம் வருகின்றது.

வியாபார நோக்கத்தோடு நடத்தப்படும் பத்திரிகைகள் போலன்றிக், கொள்கைக்காகப் பணியாற்றும் பத்திரிகைகளை நடத்துவதென்பது எளிதான காரியமென்று நினைத்துவிட முடியாது. அவற்றிற்குப் பலவிதமான தொல்லைகள் ஏற்படும். சமூக சீர்திருத்தமென்பது, தொல்லைகளும்— தொந்தரவுகளும், எதிர்ப்பும் இன்றி நடக்கக்கூடியதன்று. பழைமைப் பிரியர்களும், பொறாமைக்காரர்களும் தங்களுடைய திறமை முழுவதையும் சீர்திருத்தப் பாதைக்குக் குறுக்கே நிறுத்திக், கொள்கைகள் நாட்டில் பரவவிடாமல் தடுப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பார்கள்.

சமூக சீர்திருத்தப்பணியில் பலவிதமான தடைகள் ஏற்படும். நீக்கக்கூடியது—ஒதுக்கக் கூடியது—உடனடியாக ஒழிக்கக்கூடியது என்ற முறையில் தடைகள் ஏற்படும். அவற்றிற்கேற்பக், காலப்போக்கை அனுசரித்துக் காரியங்களை நடத்திச்சென்று வெற்றிகாண வேண்டும். தடைகளைக் கண்டு தயங்கினால் எடுத்துக்கொண்ட காரியத்தை எந்தக் காலத்திலுமே நிறைவேற்ற முடியாது. தடைகளின் தன்மையை அறிந்து அதற்கேற்பப் பணியாற்றினால் மட்டுமே வெற்றிகாணமுடியும்.

சமுதாயத்திலுள்ள சாதித்தொல்லைகள், சனாதனக் கோட்பாடுகள், வைதிகக் கொடுமைகள், மதவேறுபாடுகள், இவற்றால் ஏற்படும்பிளவு-பகைமை-ஒற்றுமைக்குறைவு ஆகியவைகளைக் களைந்தெறிவதென்பது சுலபமான காரியமன்று. பன்னெடுங்காலமாக மக்களிடையே பரப்பப்பட்டு வந்த கொடுமைகள் இவை. இக்கொடுமைகளைப்போக்குவதையே நாம் குறிக்கோளாகக் கொண்டுள்ளோம்.

"திராவிடநாடு" கடந்த ஆறு ஆண்டுகளாக இந்தப் பணியினைச் செய்து வந்ததுபோலவே இனியும் தொடர்ந்து பணியாற்றும் என்பதை வாசகர்களுக்குத் தெரிவித்துக் கொள்வதன் வாயிலாக அவர்களின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் தர வேண்டுகிறோம்.

எந்த ஒருபொதுப்பணியும், அதற்குச் சம்பந்தப்பட்ட மக்களின் ஒத்துழைப்பின்றி நடக்க முடியாதென்பதை நீங்கள் அறிவீர்கள். "திராவிடநாடு", நாட்டில் பரவி, அது வெளியிடும் கருத்துக்களை மக்கள் மனதில் பதியவைத்துப் பயன் உண்டாக்குவதற்கு உறுதுணையாய் நின்று பணிபுரியும் ஏஜண்டுத் தோழர்களுக்கும் சந்தாதாரர்களுக்கும் நாம் பெரிதும் நன்றி பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம்.

ஒவ்வொரு ஆண்டுத் தொடக்கத்திலும், ஏஜண்டுத் தோழர்களுக்கும் சந்தாதாரர்களுக்கும் நாம் நினைவூட்டுவதையும், வேண்டுகோள்விடுவதையும் இவ்வாண்டுத் தொடக்கத்திலும் வழக்கம்போல் கையாள வேண்டிய நிலையிலேயே இருக்கிறோம். இவ்வாண்டு, கணக்குப் புத்தகம் கவலையை அதிகமாகவே உண்டாக்கும் நிலைமையில், ஏஜண்டுத் தோழர்களில் சிலர் பராமுகமாய் இருக்கின்றனர். கடந்த இரண்டு வாரங்களாகச் சில ஏஜண்டுகளுக்கு பத்திரிகை அனுப்புவதைக் கூட நிறுத்தும்படியான நிலைமையை அவர்கள் உண்டாக்கிவிட்டார்கள்.

பத்திரிகைக் காகிதத்துக்கு இருந்த கட்டுப்பாடு நீங்கிவிட்டதென்ற போதிலும், காகித விலை நஞ்சென ஏறிக்கொண்டே போகிறது. கடந்த மாதத்தில் ஏழணு விற்ற காகிதம் இம்மாதத்தில் எட்டரை அணு என்று விற்கப்படுகிறது. இன்னும் விலை ஏறுமென்றும் சொல்லப்படுகிறது. இந்த நிலையிலும், நாம் பத்திரிகையின் விலையை உயர்த்தாமலும், பக்கங்களைக் குறைக்காமலும் வாசகர்களைத் திருப்திப்படுத்த வேண்டும் என்ற விருப்பத்தைக் கைவிடவில்லை.

கொள்கைக்காக நடத்தப்படும் பத்திரிகைகளை இலாபத்தை எதிர்பார்த்து நடத்தமுடியாது. இலாப நோக்கம் வலுப்பெற்று விட்டால், கொள்கையின் நோக்கம் சிதறடிக்கப் பட்டுவிடும். எனவேதான் நாம் இலாபத்தைக் குறிக்கோளாகக் கொள்ளாமல், கொள்கையையே குறிக்கோளாகக் கொண்டுள்ளோம். "திராவிட நாடு" இதழைப் படிக்கும் ஒவ்வொருவருக்கும் தெரியும், அது இலாபத்துக்காக நடத்தப்படும் பத்திரிகை அல்ல என்பது. இலாபத்தை அள்ளிக் குவிக்கும் விளம்பரங்களைத் "திராவிட நாடு" எப்போதுமே ஏற்றுக் கொள்வதில்லை. விளம்பரங்கள் போடும் இடத்தில், மக்களுக்குப் பயன்படும் நல்ல கருத்துக்களை வெளியிட்டால், அதுவே சிறந்த இலாபமென்று, "திராவிட நாடு" கருதிப் பணியாற்றி வருகின்றது.

இந்த நிலையில், ஏஜண்டுத் தோழர்களிற் சிலர் தங்கள் ஊக்கத்தையும் முயற்சியையும் தளர விடுவதன் வாயிலாக நமக்குத் தொல்லையையும், அவர்களை எதிர்பார்த்து இருக்கும் வாசகர்களுக்கு ஏமாற்றத்தையும் தரும் நிலைமையை மாற்றி, "திராவிட நாடு" இன்னும் சிறந்த முறையில் மக்களுக்குப் பயன்படும்படி செய்வது, ஏஜண்டுத் தோழர்களின் இன்றியமையாக் கடமை என்பதை அன்புடன் நினைவூட்டி வேண்டிக் கொள்கின்றோம்.

இந்தக் குறை ஏஜண்டுத் தோழர்களை மட்டும் பொறுத்ததல்ல. வாசகர்கள் பலர் அவர்களுக்குக் கொடுக்கும் தொல்லையே, அவர்கள் பாக்கியை மாசா மாசம் ஒழுங்காக அனுப்பமுடியாமல் இருப்பதற்குக் காரணம் என்றும் தெரிகிறது. எனவே, வாசகர்கள் இந்தக் குறைக்கு இடம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளுமாறு அவர்களையும் கேட்டுக்கொள்கிறோம்.

"திராவிட நாடு" இதழுக்குக் கட்டுரை — கவிதைகள் வழங்கிய அன்பர்கட்கும், அச்சகத் தோழர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் எமது அன்புகலந்த நன்றியறிதலை உரித்தாக்கித், "திராவிட நாடு" இதழின் ஏழாவது ஆண்டை உங்களின் ஆதரவை எதிர்பார்த்துத் தொடங்கியிருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

# சைவ–வைணவ மதபோதனை

*

மடாதிபதிகளின் முயற்சியும், சர்க்காரின் அதிகார பூர்வமான ஆதரவும் சேர்ந்த ஒருபுதிய திட்டம் இப்போது அமுலுக்கு வரப்போவதாகத் தெரிகிறது. அதாவது, மக்கள், தங்கள்வாழ்க்கையை நடத்துவதற்கு வேண்டிய எல்லாவிதமான வசதிகளையும் பெற்றுவிட்டனர் என்றும், இனி அவர்களுக்கு யாதொரு குறையும் இல்லையென்றும், உணவுப் பஞ்சமோ, துணிப்பஞ்சமோ, வேலையில்லாத் திண்டாட்டமோ நாட்டில் இனித் தலைகாட்ட முடியாதென்றும், இவற்றிற்கான அடிப்படை ஆக்கவேலைகளை எல்லாம் சர்க்கார் சரிவரச் செய்துவிட்டதென்றும்; இப்போது மக்களுக்கு வேண்டப்படுவது, ஆத்மா சாந்தி அடைவதற்குரிய ஒரு மார்க்கம்தான் என்றும், இந்தத் திட்டத்தையும் நடைமுறைக்குக் கொண்டுவந்துவிட்டால், இனி, மேற்கொண்டு சர்க்கார் மக்களின் நன்மைக்காகச் செய்யவேண்டியது எதுவும் இல்லையென்றும் பொருள் கொள்ளும் முறையில் அந்தப் புதிய திட்டம் மக்கள்முன் கொண்டுவரப் படுகின்றது.

அந்தத் திட்டம் என்னவென்றால், சைவ–வைணவ மதங்களைப் பற்றிய உண்மைகளையும் உயர்வுகளையும் மக்கள் அறியும்படி செய்வதாகும். சர்க்கார், மன்றங்கூட்டி, மக்களுக்கு இப்போது இன்றியமையாது தேவைப்படுவது எது என்று ஆலோசித்ததில், சைவ–வைணவ மதங்களின் உயர்வை அறிந்துகொள்வது ஒன்றுதான் என்ற முடிவுக்கு வந்தனர் என்றும், எனவே இத்திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவது உடனடியாகச் செய்யப்பட வேண்டிய காரியமென்றும் சர்க்கார் கருதுவதாகத்தெரிகிறது. அதனாலேதான், சைவ–வைணவ மதச் சிறப்புக்களை மக்களிடையேபரப்புவதற்கு ஒரு பிரச்சாரக் குழுவையும் ஏற்படுத்தப் போவதாகவும் தெரிகிறது.

எனவே, சைவ–வைணவ மதங்களை நாட்டில் பரப்பும் பணியினைத்தான், நாடு இன்றுள்ள நிலையில், சர்க்கார்மிகவும்அவசர அவசரமாகச் செய்ய வேண்டுமா என்பது ஒருபுறமிருக்க, அந்த மதங்களால் மக்கள் அடைந்த–அடைகின்ற – அடையப் போகும் நன்மைகள் யாவை என்பதைச் சர்க்கார் முதலில் தெரிந்துகொள்ளவேண்டுமென்பதற்காகவும், சைவ—வைணவ மதங்களைப் பற்றிப் பிரச்சாரம் செய்யச் சர்க்கார் நியமிக்கும் மதபோதகர்களிடம் பொதுமக்கள் தங்கள் ஐயப்பாடுகளைக் கேட்டுத் தெரிந்து தெளிவு பெறுவதற்காகவும் பயன்படக்கூடிய சில வினாக்களை இங்கு வெளியிடுகிறோம். சைவ–வைணவ மதங்களைப் பின்பற்றும் நோக்கத்தோடுள்ளவர்கள், இந்த வினாக்களைத் தங்களிடம் மதபோதனை செய்பவரும் பிரச்சாரகர்களைக் கேட்டு, விடை தெரிந்து கொள்வது அவர்களுடைய நோக்கத்து அரண் செய்வதுமாகும்.

## வினாக்கள்

1. நமது நாட்டில் சைவ சமயத்திற்கு முன்னால் ஏதாவது சமயம் இருந்ததா?

2. அது எது?

3. சைவசமயம் என்பது எப்போது உண்டாயிற்று?

4. அதற்கு முதல் கர்த்தா அல்லது சமயாச்சாரி என்பவர் யாவர்?

5. சைவசமயத்திற்கு மற்றச் சமயத்தில் இல்லாத தனிக்கொள்கைகள் என்ன?

6. அதற்கு ஆதாரம் யாது?

7. சைவம் என்பது சிவன் என்னும் ஒரு உருவமுள்ள கடவுளை வழிபடுகடவுளாகக்கொண்டதா?

8. அல்லது தனித் தெய்வமில்லாமல் ஏதாவது கொள்கைகளை மாத்திரமோ அல்லது குணத்தை மாத்திரமோ அடிப்படையாகக் கொண்டதா?

9. சிவன் என்பது ஒரு கடவுள் பெயரா?

10. ஒருதன்மையா?

11. ஒரு குணமா?

12. சிவனுக்கு உருவம் சொல்லப் படுகிறதே, அது ஏன்?

13. அதற்குப் பெண்டு பிள்ளைகளும் இருப்பதாகக் காணப்படுகின்றதே, அது ஏன்?

14. சைவசமய சம்மந்தமான பல கடவுள்களுக்கு உள்ள ஆயிரக்கணக்கான பெயர்கள் வடமொழியில் இருப்பானேன்?

15. ஆயிரக்கணக்கான கடவுள்களுக்கும் அவர்களது பெண்டு பிள்ளைகளுக்கும் வேறு வேறு பெயர்கள் ஏன்?

16. சைவத்திற்கும் சமணக் கொள்கைகளுக்கும் பௌத்தக் கொள்கைகளுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

17. ஆரிய வேதத்தையும் ஜீவபலி வேள்வியையும் சைவம் ஒப்புக்கொள்ளுகின்றதா மறுக்கின்றதா?

18. சைவ சமயாச்சாரியார்கள் என்பவர்கள் ஆரிய வேதத்தையும் அதில் காணும் வேள்விகளையும் ஒப்புக் கொள்கின்றார்களா மறுக்கின்றார்களா?

19. சமணர்கள் வேதவேள்வியை நிந்தனை செய்தார்கள்என்றால், அது எந்த வேதத்தையும் வேள்வியையும்?

20. சைவ சமயத்திற்குள்ள சித்தாந்தமும் ஆகமும் வடமொழியா தென்மொழியா?

21. சைவத்தையே சேர்ந்த சைவக் கடவுள்கள் இருக்கும் தனித் தனி ஊர்களுக்குத் தனித் தனி பெருமை ஏன்?

22. சமயாச்சாரிகள் என்போர்களால் பாடப்பட்ட ஊர்களுக்கும் பாடப்பட்ட கடவுள்களுக்கும் மாத்திரம் அதிகமான மதிப்பு ஏன்?

23. சைவ சமயாச்சாரியர்களும் சைவசமய பக்தர்களும் பௌத்தர்களையும் சமணர்களையும் துன்புறுத்தியதேன்?

24. துன்புறுத்தவில்லையானால் தேவாரம் முதலியவைகளில் அவர்களைக் கண்டபடி இழித்துக்கூறி வைத்திருப்பதேன்?

25. வடமொழிக் கதைகளையும் வடமொழிப் புராணங்களையும் தள்ளிவிட்டால் சைவர்களுக்கு ஏதாவது கடவுளுண்டா?

26. சைவத்திற்கு ஏக கடவுள் வணக்கமா? பல கடவுள் வணக்கமா?

27. எத்தனை கடவுள்கள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன?

28. அதோடு தீர்ந்ததா இனியும் உண்டாகுமா?

28. சைவசமயத்திற்குக் கோவில் கொள்கை உண்டா?

30. விக்கிரக ஆராதனை உண்டா?

31. வேறு ஒருவன் அர்ச்சகனாக இருந்துதான் கடவுளை வணங்க வேண்டுமா?

32. ஆகிய இவைகளுக்கு ஆதாரம் எது?

33. சைவர்களில் ஒவ்வொருவரும் அவரவர் வணங்கவேண்டியகடவுளை நேரில் பூசனைபுரிய அவரவருக்கு உரிமையுண்டா?

34. சைவத்தில் ஜாதி வித்தியாசம் உண்டா?

35. சைவக் கோவில்களில் இப்போது ஜாதிவித்தியாசம் பாராட்டப் படுகின்றதா?

36. அது சைவத்திற்கு முரண் அல்லவா?

37. முரணானால் அம்முரணுக்கு இதுவரை சைவர்கள் ஏதாவது பரிகாரம் செய்தார்களா?

38. கடவுளை வணங்கக் கற்பூரம் கொளுத்திவைத்து வணங்கவேண்டுமென்பதற்கு ஏதாவது ஆகமம் உண்டா? எந்த ஆகமத்தில் சொல்லுகிறது?

39. ஏதாவது ஒரு ஆகமத்தில் சொல்லப்பட்டால் அது ஆரியர்கள் ஆகமமா? தமிழர்கள் ஆகமமா?

40. கற்பூரம் கொளுத்தும் வழக்கம் எது முதல் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது?

41. பிள்ளையார் என்றகடவுளுக்கு சைவத்தில் இடம் இருக்கின்றதா?

42. கந்தபுராணத்தை சைவர்கள் ஒப்புக்கொள்ளுகின்றார்களா? திருவிளையாடற் புராணத்தை ஒப்புக்கொள்ளுகின்றார்களா?

43. ஒப்புக்கொள்வதானால் அது சைவத்தில் பொருந்தியதுதானா?

44. சைவர்கள் சிவரகசியத்தையும் சிவமகா புராணத்தையும் சிவ பராக்கிரமத்தையும் ஒப்புக்கொள்ளுகின்றார்களா?

45. நால்வர்கள் பிர்மாவையும் விஷ்ணுவையும் ஒப்புக்கொள்ளுகின்றார்களா?

46. அவை தனித்தனிக் கடவுள்களா?

47. நால்வர்கள் விஷ்ணுவைத் தாழ்த்திப்பாடி இருந்தால் அது மதத்துவேஷமா அல்லவா?

48. மனுஸ்மிருதியும் பாராசரஸ்மிருதியையும் சைவர்கள் ஒப்புக்கொள்ளுகின்றார்களா?

49. சமணர்கள் கழுவேற்றப்பட்டதைச் சைவர்கள் ஒப்புக்கொள்ளுகின்றார்களா? கோவில்களில் இன்றும் திருவிளையாடல் புராணக்கதை உற்சவங்கள் நடக்கின்றதை மறுக்கின்றார்களா ஒப்புக்கொள்ளுகின்றார்களா?

50. திருநீறு எதற்காகப் பூசுவது?

51. இலிங்கத்திற்கும் ஆவுடையாருக்கும் சொல்லும் கதையை ஒப்புக்கொள்ளுகின்றார்களா இல்லையா?

52. ஒப்புக்கொள்ளாவிட்டால் அப்படி உள்ள வடமொழி ஆதாரத்திற்கு என்ன பதில் சொல்லக் கூடும்?

53. இலிங்கம் என்னும் வார்த்தை என்ன பாஷை? அதற்கு என்ன அர்த்தம்? எந்த ஆதாரப்படி?

54. கைலபங்கிரி எது, சுப்பிரமணியன் எது, கந்தன் எது, குமரன் எது?

55. மலையரசன் மகளென்றால் என்ன?

56 இப்பொழுது இதுவரை நடந்து வந்த கோவில்முறை பூசைமுறை உற்சவமுறை முதலியவைகளால் ஏற்பட்ட நன்மைகள் என்ன?

57. இவை இப்படியே நடக்க வேண்டியவைதானா?

58. இவைகளின் பேரால் பல லக்ஷம் ரூபாய்கள் செலவாகின்றது நியாயந்தானா?

59. அதை நிறுத்தி அச்செலவையும் காலத்தையும் வேறுவழியில் திருப்பலாமா அல்லது இப்படியே தான் இருக்கவேண்டுமா?

60. சைவர்கள் மேல் உலகத்தை ஒப்புக்கொண்டார்களா?

61. மறுபிறப்பை ஒப்புக்கொள்ளுகின்றார்களா?

62. திதிகளை ஒப்புக்கொள்ளுகின்றார்களா?

63. பிராமணர்களை ஒப்புக்கொள்ளுகின்றார்களா?

64. சமயாச்சாரிகளின் அற்புதங்களை எல்லாம் அப்படியே நடந்ததாகவே ஒப்புக்கொள்ளுகின்றார்களா?

65. மற்றும் சைவப்புராணங்களில் உள்ள எல்லா அற்புதங்களையும் நடந்ததாகவே ஒப்புக்கொள்ளுகின்றார்களா?

66. ஒவ்வொருகோவிலுக்கும் ஒவ்வொரு சாமிக்கும் ஏற்பட்ட ஸ்தல மூர்த்தி தீர்த்த புராணங்களை உண்மை என்பதாக ஒப்புக்கொள்ளுகின்றார்களா?

67. சைவர்களுக்கு கலியாண முறை எது?

68. சைவர்களுக்கு அல்லது சைவச்சாமிகளுக்குத் தேவதாசி முறைகள் உண்டா?

69. வருணாசிரமம் உண்டா?

70. உண்டென்றால் ஆதாரம் எது?

71. இல்லை என்றால் ஆதாரம் எது?

72. இப்பொழுது அமுலில் இருப்பதற்குக் காரணம் என்ன?

73. சைவ மடங்கள் எதற்கு?

74. அவைகள் இதுவரை சாதித்தது என்ன?

75. அம்மடங்கள் இனியும் அப்படியே இருக்கவேண்டியதுதானா?

76. இம்மடங்களைத் திருத்த இதுவரை எந்தச் சைவராவது முயற்சித்ததுண்டா?

77. இப்பொழுதுள்ள சைவர்களில் சைவ சமயத்தைப்பற்றி அபிப்பிராயம் சொல்ல நிபுணர் யார்?

78. அருகதை உடையவர் யார்?

79. பாரதம், இராமாயணம், பாகவதம் முதலிய வைணவப் புராணங்களில் வரும் சிவனைச் சைவர்கள் ஒப்புக்கொள்கிறார்களா?

80. இதுபோலவே, பெரிய புராணம், தேவாரம், திருவாசகம் ஆகிய நூல்களில் பேசப்படும் திருமாலை வைணவர்கள் தங்கள் கடவுளென ஒப்புக்கொள்கின்றார்களா?

81. வடமொழியும், அம்மொழியிலுள்ள நூல்களும் இன்றிச் சைவ வைணவங்களை விளக்கமுடியுமா?

## காதற் கலப்பு மணம்

காஞ்சிபுரம் முன்னாள் நகரமன்றத் தலைவர் தோழர் சாமிநாத முதலியார் புதல்வன் எம். எஸ். வெங்கடேசன் அவர்களுக்கும், காஞ்சிபுரம் பங்காரு நாயுடு அவர்களின் புதல்வி ராதாபாய் அம்மைக்கும் 13—6—48ல் சென்னை மயிலாப்பூரிலுள்ள பாரிஷ் மண்டபத்தில் தோழர் சி. என். அண்ணாத்துரை தலைமையில், நகைச்சுவை அரசர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள், சி. டி. டி. அரசு அவர்கள் ஆகியோரின் அரிய சொற்பொழிவுடன் காதற் கலப்புப் பதிவுத் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

# பெரிய இடத்துத் திருமணம்—ஆனால்......!

★

மைசூர்த்திவான் சர் ஆற்காட் இராமசாமிமுதலியார் புதல்வி ஜெயலட்சுமி, பி. ஏ; (ஆனர்ஸ்) க்கும், காஞ்சிபுரம் தோழர் ஏ. பாலகிருஷ்ணமுதலியார் அவர்கள் புதல்வன் அனந்தகிருஷ்ணன் பி. ஏ; பி. எல்-க்கும் 10—6—48-ல் மைசூரில் திவான் மாளிகையில் திருமணம் நடைபெற்றது.

கடந்த இருபதாண்டுகளுக்கு மேலாகவே பலவிதமான சீர்திருத்தக் கருத்துக்களை நமது இயக்கம் பரப்பி வருகின்றது. அறிவுக்கும் நாகரிகத்துக்கும் புறம்பான பல மூடப்பழக்க வழக்கங்கள், தமிழ் மக்களின் நாகரிக வாழ்க்கைக்கும் முன்னேற்றத்துக்கும் தடையாகவும் அடிமை மனப்பான்மையை உண்டாக்கக் கூடியனவாகவும் உள்ள இந்நிலை மாறவேண்டும்—மாற்றியமைக்கப்படவேண்டு மென்பதைக் குறிக்கோளாகக் கொண்டு நமது இயக்கம் பணிபுரிந்து வருகின்றது. இதில், எதிர்பார்த்த அளவுக்கு நாம் வெற்றிகாண முடியவில்லை என்ற போதிலும், சில குறிப்பிட்ட கொள்கைகளில் மட்டும் நாம் எதிர்பார்த்ததைவிட அதிகமான வெற்றியை அடைந்திருக்கிறோம். அவற்றுள் குறிப்பிடத்தக்கது, தமிழ்மக்களின் திருமண முறையில் தலைகீழ் மாற்றம் ஏற்பட்டதுதான்.

சில காலத்துக்கு முன்னர், தமிழ்நாட்டிலுள்ள பலருக்குத் திருமணம் என்றாலே அது என்ன என்பது புரியாததாக இருந்தது. “விவாஹம்” “கல்யாணம்” “கன்னிகாதானம்” என்று சொன்னால் மட்டுமே எளிதாகப் புரிந்துகொள்வர். தாய்மொழியாகிய தமிழ்மொழியிற் கூறினால் ஒன்றைப் புரிந்துகொள்ள முடியாத தமிழ்மக்கள் பலர், சமஸ்கிருதத்தில் கூறினால் அதனை மிக எளிதாகப் புரிந்துகொள்ளும் அளவுக்குத் தங்கள் பிறப்புரிமைகளை இழந்திருந்தனர்—இழக்கும்படிசெய்யப்பட்டிருந்தனர். நமது இயக்கம் தோன்றி இத்துறைகளில் பணியாற்றத் தொடங்கி, “விவாஹகம்” என்பது நமக்கும் நம் மொழிக்கும் புறம்பான சமஸ்கிருதச் சொல் என்றும், தமிழ்மக்களுக்குரிய சொல் அல்லவென்றும் கூறித், திருமணம் என்ற சொல்லே தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் உரியசொல் என்றும் கூறிவந்ததன் பயனாக, நம்மவர், ‘விவாஹம்’ என்று கூறுவதைவிட்டுத், திருமணம் என்று கூறத் தொடங்கினர். என்ற போதிலும், சிலர்—சர் இராமசாமி முதலியார் போன்ற அறிவாளிகள்கூட, ‘விவாஹகம்’ என்று சொல்வதையே பெருமைக்குரியதாகக் கருதி வந்தனர். திருமணம் என்று கூறுவதை ஏதோ இழிவு — சொல்லத்தகாத சொல்என்றுகூடக்கருதினர்பலர்.

இயக்கம், தன்னுடைய பணியை விடாது செய்து வந்ததன் பயனாக விவாஹம் என்று கூறுவதுமாறித், திருமணம் என்று கூறும்நிலை ஏற்பட்டது. திருமணம் என்ற தமிழ்ச் சொல், நாட்டில் வழங்கத்தொடங்கிய பின்னரும், மணமுறைகள் தமிழ்முறைப்படி நடத்தப்படாமல், ஆரிய முறைப்படிதான் நடைபெற்று வந்தன. திருமணம் என்ற போர்வைக்குள் “விவாஹம்” புகுந்து சிலகாலம் வேலைசெய்தது. அதாவது தமிழ்மக்களின் திருமணங்கள் பல, ஆரியமுறைப்படி, ஆரியப் புரோகிதர்களைக் கொண்டே நடைபெற்று வந்தன. அதன் பின்னர், திருமணமுறையில் ஆள்மாற்றம் ஏற்பட்டது. அதாவது, ஆரியப் புரோகிதர்களுக்குப் பதிலாகத் தமிழர்கள் சிலர் அந்தக் காரியத்தைச் செய்ய முன்வந்தனர். புரோகிதர்கள் ஆரியமுறைப்படி செய்யும் சடங்குகள் எல்லாவற்றையும் இவர்களும் செய்தனர். இது சிலகாலம் நடந்தது.

அதன்பின்னர், தமிழர் திருமணமுறை என்பதாக ஒரு ஏற்பாடு சிலரால் செய்யப்பட்டது. அதாவது, ஆரியச்சடங்குகள் சிலவற்றை நீக்கினர்—சமஸ்கிருத மந்திரங்கள் சொல்வதற்குப் பதிலாகத் தேவா திருவாசகங்களைப்பாடினர் - மற்றச் சடங்குகள் எல்லாம் ஆரிய முறைப்படியேதான் நடந்தன.

இந்த நிலையில், தமிழ்த் திருமணமுறைப்படி திருமணம் செய்ய முன்வந்த பலர், நமது இயக்கத் தலைவர்களையும் அத்திருமணங்களில் கலந்து சொற்பொழிவாற்றுமாறு அழைக்கத் தொடங்கினர். ஒரு காரியத்தை இன்ன முறையில்தான் செய்யவேண்டுமென்று அறிவுரை கூறுவோர் ஒரு புறமும், அக்காரியத்தைச் செய்வோர் இன்னொரு புறமாக நின்று காரியங்களை நடத்தும் முறைமாறி, இருசாராரும் ஒருங்கு சேரும் நிலை ஏற்பட்டது.

இந்த நிலை ஏற்பட்டபின், திருமணமுறையில் பெருத்த மாறுதல் உண்டாயிற்று. அதாவது, தமிழ்த் திருமணமுறை என்று சிலரால் ஏற்படுத்தப்பட்ட முறைகளும் தவறென்பதைத் தமிழ்மக்கள் பலர் உணரத் தொடங்கினர். அதன் பயனாகத் தமிழ்த்திருமண முறையும் பெரும்பாலும் நீக்கப்பட்டு, இயக்கத்தோழர்களைக்கொண்டே திருமணத்தை நடத்திக்கொள்வது என்ற முறை ஏற்பட்டது — சடங்குகளும் படிப்படியாக நீக்கப்பட்டன-யாராவது ஒருவர் முன்னிலையில், உறவினர்களும் நண்பர்களும் சூழஇருந்து மணமகன், மணமகளுக்குத் தாலி கட்டுவதோடு மணவினையை முடித்துக்கொள்வது என்ற நிலை ஏற்பட்டது. பின்னர், தாலி கட்டும் வழக்கத்தையும் பெரும்பாலார் கைவிட்டு மணமகனும் மணமகளும் மாலையோ—மோதிரமோமாற்றிக்கொண்டால் போதும் என்ற அளவுக்குத் திருமணமுறையில் மாறுதல் உண்டாவதாயிற்று.

திருமணமுறையில் இவ்வளவு மாறுதல் ஏற்பட்ட பின்னரும், ஒரு முக்கியமான மாறுதல் ஏற்படாமலே இருந்தது. அதாவது, மணமகன், தனக்கு ஏற்ற மணமகளையோ; மணமகள், தனக்கு ஏற்ற மணமகனையோ தாங்களாகவே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் தமிழர் திருமண முறைக்குப் பெற்றோர்களும் உறவினர்களும் தடையாய் இருந்து, அவர்களே அந்தக் காரியத்தைச் செய்து வந்தனர்—இப்போதும் பல இடங்களில் இந்த முறைதான் கையாளப்பட்டு வருகின்றது. என்ற போதிலும், காலமாறுதலும், நம் இயக்கத்தவரின் ஓயா உழைப்பும் இந்தத் தவறையும் திருத்திக்கொண்டுதான் வருகின்றது.

இந்த ஏற்பாட்டிலும் நாம் வெற்றி பெற்றுவிடுவோம் என்பதற்கு அறிகுறிகள் பல காணப்படுகின்றன. இப்போது திருமணம் செய்துகொள்ளும் தோழர்கள் பலர், தங்களுக்கு ஏற்ற கணவனையும், மனைவி

யையும் தாங்களாகவே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் சிறந்த முறை கையாளப்பட்டு வருகின்றது. அது மட்டுமல்ல, ஆரிய முறையால் ஏற்பட்ட சாதிப் பாகுபாடுகள்கூட இன்றைய திருமண முறையால் தவிடுபொடியாக்கப்பட்டு வருகின்றன. இன்று பல தோழர்கள் காதற் கலப்பு மணம் செய்துகொள்ளும் உயர்ந்த பண்பைப் பெற்றிருப்பது கண்கூடு. இப்போது, 'திருமணம்' என்ற சொல்கூட மாறி, வாழ்க்கை ஒப்பந்தம் என்ற பண்டைத் தமிழர் முறைஏற்பட்டுவிட்டது. இப்போது நடைபெறும் வாழ்க்கை ஒப்பந்தங்கள்பெரும்பாலும்பதிவு (Register) செய்துகொள்வதோடு முடிந்து விடுகின்றன. உற்றார் உறவினரோ, நண்பர்களோ அழைக்கப்படாமல், சர்க்கார் அதிகாரி (Registrar) முன்னிலையில் இரண்டொரு சாட்சிகளுடன் தங்கள் வாழ்க்கை ஒப்பந்தத்தைப் பணச்செலவு எதுவுமின்றி முடித்துக் கொள்ளுகிறார்கள்.

திருமண முறையில் இந்த அளவு சீர்திருத்தமும் முற்போக்கும் ஏற்பட்ட நிலையில்தான், சர். ஏ. இராமசாமி அவர்கள் தம்முடைய புதல்வியாரின் திருமணத்தை நடத்தியிருக்கிறார். திருமணம், திருந்திய முறையில்—தமிழர் முறைப்படிதான் நடந்திருக்கும் என்று நீங்கள் கருதுவீர்கள். நீங்கள் மட்டும் என்ன; காலமாறுதல், கட்டாயம் இந்த நிலையைத்தான் சர். இராமசாமி அவர்களுக்கும் உண்டாக்கியிருக்கும் என்று, காலமாறுதலையும், உண்மை நெறியினையும் விரும்பாதவர்கள் தவிர, மற்றைஎல்லோருமே எண்ணிணியிருப்பார்கள். சர். இராமசாமி அவர்கள், உலக அறிஞர்களிடையே முதலிடம்பெறக் கூடியவர் என்று பல மேல் நாட்டு அறிஞர்களால் பாராட்டப்பட்டவர். அப்படிப்பட்ட பேரறிஞர், தம்முடைய வீட்டுத் திருமணதத்தை அறிவுக்குப் புறம்பான—அநாகரிகமான முறையில் ஒரு போது நடத்தியிருக்கமாட்டார் என்று கூட எண்ணுவீர்கள். பலநாடுகள் சுற்றிப், பல நாட்டுப் பழக்க வழக்கங்களையும், அந்நாடுகளில் நடைபெறும் திருமண முறைகளையும் கண்டறிந்த அனுபவமும், இயற்கையான தெளிந்த அறிவும் பெற்றவர்—தாம்பெற்ற அனுபவத்தைக் கூறினால், அவருடைய சொல்லைக் கேட்டு அதன்படி நடக்க ஆயிரமாயிரம் மக்கள் தயாராக முன்வரும் உயர்ந்த நிலையைப் பெற்றவர்-தமமுடைய வீட்டுத் திருமணத்தைப் பலர் கண்டு, தாங்களும் அதன்படி செய்யவேண்டுமென்ற எண்ணத்தை உண்டாக்கக் கூடியவர் வீட்டில் நடைபெற்ற திருமணம் உண்மையாகவே சீர்திருத்த முறையில்—அறிவுக்குப் பொருந்தக்கூடிய முறையில்—ஆபாசச் சடங்குகளை நீக்கியே செய்திருப்பார் என்றும் எண்ணுவீர்கள். சிலருக்கு, அவர்கள் வீட்டாரின் வி முதலும், உறவினர்களின் உறுமுதலும், நண்பர்களின் முட்டுக்கட்டையும் குறுக்கே நின்று நல்ல காரியங்களைச் செய்யவிடாமல் தடுப்பதுண்டு. ஆனால், சர். இராமசாமி அவர்களைப் பொறுத்த வரையில் இத்தகைய தடைகள் எதுவும் ஏற்படக் காரணம் இல்லை. வீட்டாரோ, உறவினரோ, நண்பர்களோ எவரும் அவருடைய பேச்சுக்கு மறுபேச்சுப் பேசமுடியாத நிலையைப் பெற்றவர். இப்படிப்பட்டவர் வீட்டில் நடக்கும் திருமணம் எந்தக்காரணத்தைக் கொண்டும் தமிழர் முறைக்குப் புறம்பான முறையில் நடந்திருக்காது என்று எவரும் எண்ணாமல் இருக்க முடியாது. அவருடைய வீட்டுத் திருமணம் நாட்டுக்குஒரு வழிகாட்டியாக இருக்கும் என்று எண்ணியிருப்பீர்கள்.

ஆனால், நடந்ததென்ன? அம்மி மிதித்து—அரசாணி சுற்றி—அருந்ததியைப் பார்த்து—அக்கினியைச் சாட்சிக்கழைத்து—ஆரியப் புரோகிதரின் அடிபணிந்து—அவரிட்ட சட்டத்துக்கு அடங்கி—மாப்பிள்ளையையும் பெண்ணையும் காசியாத்திரை போய்வரும்படி அய்யர் கட்டளையிட—அவர்களும் சிறிது தூரம்போய் வந்து, காசிக்குப் போய்வந்ததாகப் பொய்கூற—அதனையும் அமெரிக்கா முதலானமேல்நாடுகளுக்குப்போய்த் திரும்பிய சர். இராமசாமி அவர்கள் பார்த்துக்கொண்டிருக்க-முகிற் கூட்டங்களைப் பிளந்துகொண்டு செல்லும் ஆகாய விமானத்தில் உலகைச் சுற்றிய சர். இராமசாமி அவர்கள், ஐயரால் வளர்க்கப்பட்ட ஓமகுண்டப் புகைக்குள் இருந்தது தத்தளிக்க—ஆங்கிலம் பயின்று அறிவு பெற்ற அவருடைய புதல்வியாரும்—பார்ப்பனரல்லாதார் நலனில் பெரும் பற்றுக்கொண்ட தோழர் பாலகிருஷ்ணனாரின் புதல்வரும், சட்டம் பயின்றவருமான தோழர் அனந்தக்கிருஷ்ணன் அவர்களும், ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே என்றபடி, ஐயரின் அட்டகாசங்களை எல்லாம் சகித்துக் கொள்ள—சகலவிதமான சம்பிரதாயங்களுடன், சுபயோக சுபதினத்தில், விவாஹசுபமுகூர்த்தம் இனிது நடைபெற்றதென்ற செய்தியைக் கேள்விப்படும் எந்தத் தமிழ்மகனும் வருந்தாமல் இருக்கமுடியாது.

ஆனால், சர். இராமசாமி அவர்களின் இந்தத் திருமண முறையைக் கண்டு வரவேற்று மகிழ்வதற்கும் ஒருசிலர் இல்லாமலில்லை. இவ்வளவு காலமாகக் கரடியாகக் கத்தினார்களே, சுயமரியாதைக்காரர்கள்! என்ன நடந்தது? சர். ஆற்காட்டார் அவர்களே நம்மளவாளைக் கொண்டு தானே திருமணத்தை நடத்தினார் என்று கூறி ஆரியக் கூட்டம் நம்மைப் பார்த்து நகைப்பார்களே என்பதை எண்ணும்போது, சர். இராமசாமி அவர்களின் இந்தப் போக்கைக் கண்டிக்காமல் இருக்க முடியுமா? கூறுங்கள்.

## தோழர் டேனியல், தாமஸ் இயற்கை எய்தினர்

சென்னை மந்திரி டேனியல்தாமஸ் அவர்கள் சிலகாலமாக நோய்வாய்ப்பட்டிருந்து 15—6—48 இரவு 59 வது வயதில் மைலாப்பூரில் தமது இல்லத்தில், இயற்கை எய்தினர் என்ற செய்திகேட்டு வருந்துகிறோம். தோழர் டேனியல் தாமஸ் அவர்கள் நிர்வாகத் திறமை படைத்தவர். பாளையம்கோட்டை முனிசிப்பாலிட்டியில் பத்து ஆண்டுகள் சேர்மனாகவும், திருநெல்வேலி ஜில்லாபோர்டின் துணைத்தலைவராக ஆறு ஆண்டுகளும் வேலை பார்த்து நிர்வாகத்தை நல்ல முறையில் நடத்தியவர். சென்னை மந்திரி சபையிலும் மதுவிலக்கு இலாகாவில் இருந்து மதுவிலக்குக்கு ஆவன செய்தவர். டாக்டர் சுப்பராயன் அவர்கள் விலகியதும் சட்ட இலாகாவும் இவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இவருடைய பிரிவால் வருந்தும் இவரது மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் உறவினர் நண்பர்களுக்கும் ஆறுதல் கூறுகின்றோம்.

# கொடுமை நல்லது!

[எஸ். கே. சாமி]

ஆச்சரியப்படுகிறீர்களா? அப்படித்தான் தோன்றும். ஆனால் உண்மையில் கொடுமை கூத்தாடுவது நல்லதுதான். நன்னிலை பெற்ற நாடுகளின் சரித்திரத்தைக் காட்டும் ஏடுகளைப் புரட்டிப் பாருங்கள், கொடுமையினால் விளைந்த நன்மை நன்கு தெரியவரும்.

கொடுமை மிக்க ஜாரின் அக்கிரம ஆட்சியில்தான் ருஷ்ய நாட்டில் ஒரு லெனின் பூத்தான். ஜார் இல்லையேல் லெனின் இல்லை; அவன் தோன்றவேண்டிய அவசியமு மிராது. சர்வாதிகாரியின் அக்கிரமம் இல்லையேல், ஜனநாயகம் இவ்வளவு வேகத்தில் ஏற்பட்டிருக்காது. அடக்குமுறை அதிகரிக்க அதிகரிக்க ஆன்மபலம் அமோகமாக வளரும். ஒரு பந்தை எவ்வளவு வேகமாகச் சுவரில் எறிகிறோமோ, அவ்வளவு வேகத்தில் எறிந்தவரை நோக்கி அது எகிறும்.

கற்பனைகள், புளுகுகள் பெருகப் பெருக, உண்மைகாண மக்கள் உள்ளம் முனையும். எதையும் நம்பும் ஏழ்மைப் புத்தி நீங்கும். மக்கள் மக்களாக வாழ முன்வருவார்கள். மனமாசு அகலும்; வேற்றுமை நீங்கும்; இன்பம் பொங்கும். பன்னெடுங்காலமாக பரங்கியரின் அடிமைகளாக வாழ்ந்தார்கள் நம் நாட்டினர்; அடிமைத்தளையை அடியோடு அகற்ற அரும்பெரும் தியாகங்கள் அனேகர் புரிந்தனர்; திருப்பூர் குமரன் இறந்தான் நாகப்பூர் கொடிப் போராட்டத்தில். வீரர் சிதம்பரம் செக்கிழுத்து, ரத்தம் சிந்தி உயிர் நீத்தார். இப்படிப் பல தியாகிகள் கொடுமைப் பேய்க்குப் பலியானார்கள். சுதந்திரம் வந்தது. துன்பத்தின் நடுவே இன்பம் முளைத்தது. அன்னிய ஆட்சி அகன்றது; மக்கள் ஆட்சி ஓங்கியது.

துன்பம் தந்த இன்பம். துன்பத்தின் குழந்தைதான் இன்பம். வேதனைகளிலெல்லாம் மிகப் பெரிய வேதனை பிரசவ வேதனை. ஆனால் இந்த வேதனையின் விளைவு இன்பத்தின் முழுஉருவமான குழந்தைச் செல்வம். இது உலக அநுபவ உண்மை. இதை யறிந்தால் துன்பம் ஏற்படும்போது சிரிக்க முடியும்.

வள்ளுவர் இந்தமாதிரி சந்தர்ப்பங்களில சிரிக்கத்தான் சொல்கிறார்.

"இடுக்கண் வருங்கா னகுக
—வதனை
யடுத்தூர்வ தஃதொப்ப தில்"

ஒரு காரியத்தைச் செய்யப்புகும்போது—ஒரு கொள்கைக்காகப் பாடுபடும்போது துன்பம் நேரிடுவது இயல்பு. அம்மாதிரி துன்பம்நேர்ந்த காலத்து மனம் நோகாது இருப்பது மட்டுமல்ல, அடுத்தாற்போல் இன்பம் வரப்போவதை எண்ணி உள்ளம் மகிழவேண்டுமாம். அது மட்டுமல்ல, அதன் அறிகுறியாகச் சிரிக்கவேண்டுமென்று வள்ளுவர் அழகாகக் கூறியிருக்கிறார்.

நமது நாட்டில் சுதந்திரப் போராட்டத்தில் தாங்க முடியாத வேதனைகள் அநுபவித்த வீரத் தலைவர்கள் அழவில்லை; சிரித்தார்கள். ஆம், அந்தச் சிரிப்பின் ஒலியால் அதிர்ந்தது வானம்! தியாகச் சிரிப்பு—தியாகத்தின் விளைவு சுதந்திரம்; இன்று மக்களாட்சி ஏற்பட்டது; என்றாலும் கொடுமைகள் கூண்டோடு குறைந்தபாடில்லை.

நோக்கும் திசையெல்லாம் நொந்த மக்கள் கூட்டம். போராட்டம், பஞ்சம், பட்டினிப் பவனிக்கோலம் ஒரு புறம்! தேனொழுகும் நிலை மற்றொரு பக்கம்! தேள்கொட்டும் நிலை பிறிதோரிடத்தில்! முதலாளி—தொழிலாளி பூசல் முற்றிய நிலை படைந்துவிட்டது. அடக்கு முறையாலும், அவசரச்சட்டப் பிரயோகங்களாலும் பயனில்லையென்பதை ஆளும் கூட்டத்தார் அறிந்துகொள்ளும் நிலையும் ஏற்பட்டுவிட்டது. இதுமட்டுமா? மன்னர்களின் மடமைப்பிடிவாதம்; மக்கள் ஆட்சியின சீர்கேடு என்ற வியப்பு; இதற்குக் காரணம் என்னவென்ற திகைப்பு! உத்தமர்களின் ஆளுகையில்—இந்த அலங்கோலமா?

கொடுமை செய்யும் கூட்டம் தங்கள் போக்கை மாற்றிக் கொள்ளாததுதான் இந்தத் துர்ப்பாக்கிய நிலைமைக்குக் காரணம். கள்ளமார்க்கட் வியாபாரம் நின்றபாடில்லை. மகாத்மா கூறியதைப்போல பணம் மாற வேண்டும். பண மூட்டைகளின் சன்னதியில் அதிகாரம் மண்டியிட்டுக் கிடக்கும் நிலை பெயரவேண்டும். பாமரருள் என்ற பயித்தியம் ஒழிய வேண்டும். அறிஞர் போர்வையில் உலாவும் வேஷதாரிகள் அழிக்கப்படவேண்டும். ஆளும் வர்க்கம் இதற்குக் கடுமையான சட்டங்கள் அமைக்க வேண்டும். காலதாமதமின்றி இது நடைபெறவேண்டும்.

மேடையில் வண்டி வண்டியாக பேசலாம்; அன்புரை பகரலாம். எடுத்துக்காட்டுகள் பல இயம்பலாம் இனிமையாக. வீட்டிலே முற்றும் மாற்று நடவடிக்கை; சொந்த வாழ்க்கையில் பேய்க்கூத்தாட்டம். இந்த நிலை மாறுவது மிக மிக இன்றியமையாதது. இன்றேல் பயனில்லை. வேஷதாரிகளை—வீண் பேச்சு வீரர்களை விரட்டியடிக்க வேண்டும். இது மக்கள் கடமை, ஆட்சி மன்றத்தாரின் பொறுப்பு. கொடுமை நல்லது! காலப் போக்கானது, கனவிலும் கருத முடியாத காரியங்களைச் சாதித்துவிட்டன என்பது கண் கண்ட உண்மை.

தொழிலாளியின் முன்னால் அச்சமின்றி நடக்கப் பணம் படைத்த—பணஆசை பிடித்த முதலாளி அஞ்சுகின்றான். அங்கம் பதறுகின்றான். பொய்யும் புரட்டும் நீண்ட காலம் நிற்காது என்ற நிலையை முதலாளிக் கும்பல் உணரக்கூடிய காலம் நெருங்கிவிட்டது. என்றாலும் பண ஆசை, பழமை வெறி, மதப் பித்து ஆகியவைகள் சுற்றிச் சுற்றி முதலாளிக் கும்பலை வளைந்து கூத்தாடுகின்றன. அந்தக் கூத்தாட்டத்தில் மதிமறந்து மயங்கிக் கிடக்கின்றது பண மூட்டைக் கும்பல். லட்ச லட்சமாக நன்கொடைகள் கொடுத்து ஆளும் வர்க்கத்தைச் சரிக்கட்டலாமென்றுஎண்ணுகிற முதலாளிவர்க்கம், நீண்டகாலம் தாங்கள் சுகபோகநிலையைநீடிக்கச் செய்யமுடியாதென்பதையும் எச்சரிக்கை செய்கிறோம். கிடைத்தது சரியென்ற போக்கில் ஆளும் வர்க்கம் இதைச் செய்கிறது என்பதை முதலாளிகள் அறிந்திருக்கக் கூடுமோ என்றும் ஐயுறுகிறோம்—இன்னும் பலவித்தை வழிகளை—தந்திரங்களில் பாட்டாளியின் உழைப்பில் பரமானந்தம் அநுபவிக்கும் நிலை நிரந்தரமாக்கப்பாடுபடுகின்றார்கள் முதலாளி வர்க்கத்தார்கள்.

கொடுமை அதிகரித்துவிட்டது; அதிகரித்துக்கொண்டே வருகின்றது. நல்லதுதான், இன்பம் சமீபத்திலிருக்கிறபடியால்.

# முன்வருவார்களா?

—*—

மதச் சார்பற்ற அரசியலை நடத்தப்போவதாகச் சொல்லிக்கொள்ளும் இன்றைய சர்க்கார், அந்தக் காரியத்தை இன்னும் நடைமுறைக்குக் கொண்டுவந்ததாகத் தெரியவில்லை. மதச் சார்பற்ற அரசியலை நடத்தும் ஒரு நாட்டில் வாழும் மக்கள் எந்தெந்த முறைகளைக் கையாண்டு எப்படி எப்படித் தங்கள் வாழ்க்கை முறைகளை அமைத்துக் கொள்ளவேண்டுமென்பதற்கு இக் கட்டுரையில் காணப்படும் விளக்கங்கள் பெரிதும் பயன்படுமென்று கருதுகிறோம்.

சுமார் 600 வருஷகாலம் ஐரோப்பாவில் நடந்த முன்னேற்றப்போர், அறிவுச் சுதந்திரத்தை நிலை நிறுத்தவே முயன்றது.

புராண நம்பிக்கைகளையும், புராண ஆதாரங்களையும் ஒழிக்க அக்காலத்தும் பெரிதும் முயற்சி செய்யப்பட்டது.

எனவே விஞ்ஞான சாஸ்திர உண்மைகளில் பாமர ஜனங்களுக்கு இருந்த துவேஷமும், மதத்தின்மீது இருந்து வந்த குருட்டு நம்பிக்கைகளும் ஏககாலத்தில் ஒழிந்துவந்தன.

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட உண்மைகளுக்கு அநுகூலமாக சமூகத்தைத்திருத்தியமைக்கவும் முயற்சிகள் நடைபெற்றன.

சுருங்கச் சொன்னால், அந்தக் காலம் குருட்டுப் பழக்க வழக்கங்கள் ஒழிந்து அறிவியக்கம் வெற்றி பெற்ற காலம் என்றுதான் சொல்ல வேண்டும்.

எனினும், புராணக் கொள்கைகளுக்குப் புதுப்பாஷியங்கள் கூறிப் புராணக் கருத்துக்களை விஞ்ஞான உண்மைகள் எனக்காட்ட ஒருசாரார் முயன்று கொண்டே இருந்தனர்.

ஐரோப்பிய மகாயுத்தம் தோன்றியதோடு அந்த மனப்பான்மையும் அடியோடு ஒழிந்தது.

உலகத்தையே நடுங்கவைத்த மகாயுத்தப் புரளியினால் பூரண விடுதலை பெற்ற பாமர ஜனங்கள் போலி உண்மைகளை அலக்ஷ்யம் செய்தனர்; விஞ்ஞான சாஸ்திரமே உலக வாழ்வுக்கு ஆதாரமாக இருக்கவேண்டுமென்றும் முடிவு கட்டினர்.

அத்துடன் மதங்களுக்கும் மன்னர்களுக்கும் இருந்துவந்த பெருமையும் தலை சாய்ந்தது.

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட சாதனங்கள் மீதும் கருத்துக்கள் மீதும் பாமர ஜனங்களுக்குப் பற்றுண்டாயிற்று. பகுத்தறிவை அடிப்படையாகக்கொண்டு சமூகமும் திருத்தியமைக்கப்பட்டது.

அகில உலக சகோதரத்துவத்தையும் அகில-உலக ஒழுக்கத்தையும், ஆதாரமாகவைத்துக்கொண்டு சர்வதேச சமத்துவ இயக்கம் ஒன்று உருவாகிவிட்டதையுணர்ந்து பழைமைப் பற்றுடையோர் திகிலடைந்தனர்.

திடும்பிரவேசமாய் சமூகக் கட்டுப் பாடுகளையும், அமைப்பையும் ஓரே புரட்டாக மாற்றம் செய்ய முயன்ற ருஷியா போன்ற தேசங்கள் அதிதீவிரமான முறைகளைக் கையாண்டது மெய்யே.

எனினும், சுமார் 20 வருஷங்களுக்குமுன் தோன்றிய புத்துயிர் இயக்கம் சென்ற 1200 வருஷ காலங்களில் சாதிக்கமுடியாத பல காரியங்களைச் சாதித்து விட்டதென்ற உண்மையை ஒருவராலும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

பழையன கழிந்து புதியன தோன்றி வலுப்பெறத் தொடங்கி விட்டன. ஆனால் இந்தியாவின் நிலைமை என்ன? இந்தியா இப்பொழுதும் மத்திய கால புராண உலகத்திலேயே இயங்கிக்கொண்டு இருக்கிறது. மதப்பற்று ஒழியவில்லை; புராண நம்பிக்கைகள் சாகவில்லை. குருட்டுப் பழக்க வழக்கங்கள் நீங்கவில்லை.

நமது அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளைத் தனித்தனியாகப் பிரித்து முடிவு செய்ய இயலாது. ஆனால் அந்தப் பயனற்ற முயற்சியையே இந்தியத் தலைவர்கள் இப்பொழுது செய்து கொண்டு இருக்கிறார்கள்; அம்முயற்சியில் அவர்கள் ஒருநாளும் வெற்றிபெறப் போவதுமில்லை.

இந்தியாவுக்கு இப்பொழுது முக்கியமாக வேண்டியது பரிபூரண மனமாற்றமே.

உண்மைச்சத்தியாக்கிரகஉணர்ச்சி இந்தியர்களுக்குத் தோன்றவேண்டும். உண்மையையே இந்தியர்கள் மதமாகவும், கடவுளாகவும் மதிக்க வேண்டும்.

மதம், ஐதீகம், புராதனப் பழக்க வழக்கங்கள் முதலிய அடிமைத் தனங்களிலிருந்து—கட்டுப்பாடுகளிலிருந்து — இந்தியர்கள் பூரண விடுதலையடைய வேண்டும்.

நெடுங்காலமாக வழக்கத்திலிருந்துவரும் பொய் நம்பிக்கைகளையும், அநாசாரங்களையும் ஒழிக்கக் கூடிய ஒரு ஞானசக்தி இந்தியாவில் இப்பொழுது உதயமாக வேண்டும்.

அதாவது, மதம் பகுத்தறிவுக்கு மேலானதாக மதிக்கப்படும் மனப்பான்மை ஒழிந்து பகுத்தறிவை மதத்துக்கு மேலானதாக மதிக்கும் மனப்பான்மை இந்தியர்களுக்குத் தோன்றவேண்டும்.

இந்தியர்களின் தற்கால மனக் குழப்பத்துக்குக் காரணம் என்னவென்பதை மகாநாடு கூட்டும் தலைவர்கள் சிந்தித்துப் பார்ப்பார்களா?

தற்காலத்து சுதந்திரம் பெற்ற தேசங்கள் கையாண்ட முறைகளைப் பின்பற்ற இந்தியத் தலைவர்களுக்கு மனத்துணிவு உண்டா?

சுயநலப்பற்றை ஒழித்து, குருட்டு நம்பிக்கைகளுக்கு அடிமைப்பட்டு அறிவுச் சுதந்திரத்தை இழக்காமல், ஆண்மையுடன் கடனாற்ற இந்தியத் தலைவர்கள் முன்வருவார்களா?

பகுத்தறிவை முன் நிறுத்தி உழைப்பதே இந்தியாவின் தற்கால இன்றியமையாத் தேவை.

அவ்வாறு உழைக்க இந்தியாவுக்கு முடியுமா? பகுத்தறிவுப்படி நடக்க இந்தியா முன்வருமா?

# இராவண காவியத்துக்குத் தடை

ஆசிரியர் குழந்தை அவர்களால் ஆக்கப்பெற்ற "இராவண காவியம்" என்ற இலக்கிய நூலுக்குச் சென்னை சர்க்கார் தடை விதித்துள்ளது. இராமாயணம் பாடிய வால்மீகியும், கம்பரும் அக்காலத்து ஆசிரியர்கள். இராவண காவியம் பாடிய குழந்தை என்பவர் இக்காலத்து ஆசிரியர். வால்மீகிக்கும் கம்பருக்கும் அக்காலத்தில இராமன் நல்லவனாகக் காணப்பட்டான். குழந்தைக்கு இராவணன் இக்காலத்தில் நல்லவனாகக் காணப்படுகின்றான். இராவணன் நல்லவன் என்ற கருத்தை ஆசிரியர் குழந்தை அவர்களுக்கு ஊட்டியது, இராமனை நல்லவனாகக் கூறும் இராமாயணம் தான் என்பதை எவரும் மறுக்க முடியாது. ஆனால், இராமனை நல்லவனாகக் கூறிய வால்மீகி, எந்த ஆதாரத்தின்மீது இராமன் நல்லவன் என்ற கருத்தை வெளியிட்டார் என்பது தெரியவில்லை. இராம—இராவணப் போர் நிகழுவதற்கு முன்னமேயே வால்மீகி இராமாயணம் பாடிவிட்டார் என்று சொல்லப்படுகின்றது. எனவே, வால்மீகி பாடிய இராமாயணத்துக்கு வால்மீகியேதான் ஆதாரம். இராமாயண ஆசிரியரான வால்மீகி, இராம—இராவணப் போர் நிகழுவதற்கு முன்பே, இராமனை நல்லவனாகக் கருதும் உரிமையைப் பெற்றிருந்தார் என்றால், இராம—இராவணப் போர் நிகழ்ந்ததாகக் கூறப்படும் இராமாயணத்தை அறிவின் துணை கொண்டு ஆராய்ந்த இராவண காவிய ஆசிரியர், இராவணனை நல்லவனாகக் கருதும் உரிமையை ஏன் பெறக்கூடாது?

ஒருவனை, அறியாமுன்—அவனோடு பழகா முன்—அவனுடைய நடவடிக்கைகளை அறியாமுன் அவனை நல்லவன் என்று கூறும் உரிமை வால்மீகிக்கு இருந்தது. ஆனால், ஒருவனை, அவன் இப்படிப்பட்டவன்—அவனுடைய நடவடிக்கைகள் இப்படிப்பட்டவை என்பதை நன்கு அறிந்தபின் அவனை நல்லவன் என்று கூறும் உரிமை ஆசிரியர் குழந்தைக்கு இல்லை. இது எந்த வகையில் நியாயம் என்பது எமக்குப் புரியவில்லை. இராமபிரானை நல்லவர் என்று கூறும் உரிமை சிலருக்கு இருக்கும்போது, இராவணேஸ்வரனை நல்லவர் என்று கூறும் உரிமை சிலருக்கு ஏன் இருக்கக்கூடாது?

அயோத்தி மன்னனான இராமனை வால்மீகி நல்லவனாகக் கூறியதால், இன்று இராமன் கடவுளாகக் கருதப்படுகின்றான். இலங்கை மன்னனான இராவணனை வால்மீகி கெட்டவனாகக் கூறியதால், இன்று இராவணன் இராட்சதனாகக் கருதப்படுகின்றான். இருவரும் நாட்டை ஆண்ட மன்னர்கள்தான். இவர்களில் ஒருவர் கடவுள்! மற்றவன் இராட்சதன்! சண்டை போட்டவர்களில் வென்றவன் நல்லவன் மட்டுமல்ல, கடவுளுமாகின்றான். தோற்றவன் கெட்டவன் மட்டுமல்ல, இராட்சதனுமாகின்றான். இவை எந்தவகையில் நியாயமென்று ஆசிரியர் குழந்தை அவர்கள் தம்முடைய நூலான இராவண காவியத்தின் வாயிலாகக் கேட்கிறார். இப்படிக் கேட்பதைத் தவறென்றும் சட்ட விரோதமென்றும் சென்னை சர்க்கார் கருதி அந்நூலுக்குத் தடை விதித்துள்ளனர்.

மக்களின் உரிமைகளைப் பறித்த ஏகாதிபத்திய சர்க்காரை விரட்டிய 'ஜனநாயக' சர்க்காரே இன்று மக்களின் உரிமைகளைப் பறிக்கும் பணியைத் தங்களுடைய முதல் வேலையாகக் கொண்டுள்ளது. இது உண்மையிலே வருந்தக்கூடியதும் வெட்கப்படக்கூடியதுமான ஒரு முறை தவறிய செயலாகும்.

இராவண காவியம் என்ற அறிவியல் இலக்கிய நூலுக்குத் தடை விதித்த சென்னைச் சர்க்காரின் இந்தப் போக்கைக் கண்டித்துத், தமிழ் எழுத்தாளர் மாநாட்டுத் தலைவர் தோழர் நாரணதுரைக்கண்ணன் அவர்கள் 15-6-48-ல் வெளிவந்த 'பிரசண்ட விகடனி'ல் எழுதியிருக்கிறார். தோழர் நாரணதுரைக்கண்ணன் அவர்கள் வெறும் எழுத்தாளர் மாநாட்டுத் தலைவர் மட்டுமல்ல, எழுத்தாளர் நலனில் பெரிதும் அக்கரைகொண்டவர். எழுத்தாளர்கள் தங்கள் எழுத்து வாயிலாக நாட்டுக்குச் செய்யக்கூடிய சேவைகள் இன்னின்னவென்பதை நன்கு உணர்ந்தவர். அதனாலேயே அவர் எழுத்தாளர் மாநாட்டின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

எழுத்தாளர்களில் பலர் இத்தகைய நடுநிலைமையைக் கொள்வதில்லை. தோழர் நாரணதுரைக்கண்ணன் அவர்கள், எழுத்தாளர்களுக்கு ஒரு விழிப்பையும், உண்மையை உரைப்பதில் தயக்கம் காட்டக்கூடாதென்பதையும் இராவண காவியத்துக்குச் சென்னை சர்க்கார் தடைவிதித்ததைக் கண்டிப்பதன் வாயிலாக எடுத்துக்காட்டியது உண்மையாகவே பாராட்டக்கூடியதாகும். நம் நாட்டிலுள்ள ஏனை எழுத்தாளர்களும் பத்திரிகை ஆசிரியர்களும் இந்த முறையைக் கையாள்வார்களானால், சர்க்கார் இத்தகைய தேவையற்ற காரியங்களில் கண்ணை மூடிக்கொண்டு இறங்கத் துணியாது.

எழுத்தாளர்களில் ஒருவரான தோழர் குழந்தை அவர்களால் எழுதப்பட்ட இராவண காவியம் என்ற நூலை நன்றாகப் படித்த பின்னரே, சர்க்கார் அந்நூலுக்குத் தடைவிதித்ததைக் கண்டித்து எழுதியுள்ளார். அவருடைய கண்டன உரையைச் சர்க்கார் கவனித்துத் தங்களுடைய தவறுதலைத் திருத்திக்கொள்ளுமென்பதற்காக அதனை இங்கு வெளியிடுகிறோம்:—

"தமிழ் இலக்கியத்தின் அணிகலமாய் இருக்கத் தகுந்த அருமையான காவியநூலொன்றைச் சென்னை அரசாங்கம் பறிமுதல் செய்திருக்கிறது. இந்நூல் "இராவணகாவியம்" எனப்பெயர்பெறும். இதனை ஆசிரியர் குழந்தை என்பவர் எழுதியிருக்கிறார். இந்நூலில் இராவணன், இராமனைவிட உயர்ந்தவன் என்றகருத்து மையப்பொருளாக இருக்கிறது. இராமாயணத்தை இயற்றிய ஆசிரியர்களுக்கு இராமனைப்பற்றி உயர்வாகச் சொல்ல எவ்வளவு உரிமை உண்டோ, அவ்வளவு உரிமை இராவணனைப்பற்றியும் சொல்வதற்கு ஒரு ஆசிரியருக்கு உண்டு. இராமாயணத்தைக் கற்பனைக்கதை என்று சொல்லுவோரும், சரித்திரக்கதை என்று சொல்லுவோரும் உண்டு. இதன் வாதப்பிரதிவாதிகளில் நம்

இப்போது இறங்க விரும்பவில்லை. ஆனால் சென்னை அரசாங்கம் இந்நூலுக்கு விதித்த தடை தமிழ் இலக்கிய வளர்ச்சிமீது போட்ட தடை என்று தான் நாம் எண்ணுகிறோம். தேவகுமாரன் எனப் போற்றப்படும் கிறிஸ்துவின் பிறப்பைப் பற்றியும் வாழ்க்கையைப்பற்றியும் எந்தனையோ விதமான ஆராய்ச்சி நூல்களை மேனாட்டில் சிறந்த பேரறிஞர்கள் எழுதியுள்ளார்கள். கிறிஸ்து என்றொருவர் பிறக்கவே இல்லையென்றும், அப்படிப் பிறந்திருந்தாலும் கன்னிமேரியின் முகத்தில் உதித்திருக்க முடியாதென்றும் எல்லாம் அவர்கள் கண்டனந் தெரிவித்திருக்கிறார்கள். இதுபோலவே இவ்வுலகத்தைக் காத்து நிற்பதாகச் சொல்லும் ஒரு கடவுள் இல்லை என்றும் சிறந்த ஆராய்ச்சி நூல்களை விஞ்ஞானப் பேரறிஞர்கள் எழுதி வெளியிட்டுள்ளார்கள். உதாரணமாக, கிறிஸ்துவினிடத்திலும், அவரது சமயத்திலுமாக நம்பிக்கை கொண்டு அரசாட்சி நடத்திவரும் ஐரோப்பிய நாடுகளில் மேற்கண்ட நூல்கள் தடுக்கப்படவில்லை. காரணம் அறிவுக்குத் தடைவிதிக்கக் கூடாது என்பதும், மனிதனின் அடிப்படை உரிமையான பேச்சு, எழுத்துக்குச் சுதந்திரம் இருக்க வேண்டும் என்பதுமேயாகும்.

இப்படிச் செய்வதின் வழியாக, ஐரோப்பிய மக்கள் பலதுறைகளிலும் தங்கள்சிந்தனையைச் செலுத்தி, சரி, தப்புப் பார்த்துக்கொள்ளவும், அதே சமயத்தில் பலதிறப்பட்ட வகைகளிலும் தங்கள் இலக்கியங்கள் சிறப்புற்றோங்குவதற்கும் உரிமை வழங்கியுள்ளார்கள். இதன் காரணமாய் ஐரோப்பிய மக்கள் உலகில் ஒரு தனிமதிப்புப் பெற்றுள்ளதும் கண்கூடு.

சென்னை அரசாங்கம் இராவண காவியத்துக்குத் தடை விதித்துவிட்டதின் மூலம், இராவண காவியத்துக்குச் செல்வாக்கும் சிறப்பும் ஏற்படும்படி செய்திருக்கிறார்கள். இதுவரை இந்நூலைப் படிக்காதவர்கள்கூட, இனி, இரகசியமாகவேனும் படித்துப்பார்க்க விரும்புவர். அத்துடன் ஒரு இராவண காவியத்துக்குப் பதிலாகப்பல இராவணகாவியங்கள் புதுப்புது வழிகளில் உண்டாக வழி ஏற்படவும் முடியும். முன்னர் இருந்த சென்னை அரசாங்கம் பாரதியார் பாட்டுக்குத் தடைவிதித்ததின் மூலம், பாரதியார் பாடல்களை நாட்டுமக்கள் அதிகமான விருப்பத்தோடும் ஆசையோடும் படிக்கலானார்கள். அதுபோலவே, முன்பு இந்திய ஆட்சிப்பொறுப்பை நடத்தி வந்த பிரிட்டிஷார், மார்க்ஸிய நூல்களை வெளிநாடுகளில் இருந்து வராதபடி தடுத்து விட்டால் கம்யூனிஸக் கொள்கையை இந்தியாவில பரவவிடாதபடி தடுத்துவிடலாம் என்று கருதினார்கள். ஆனால் அவர்கள் எண்ணியபடி எதுவும் நடக்கவில்லை. அதற்கு மாறாக பொதுவுடைமைக் கொள்கை நாட்டிலே காட்டுத் தீப்போல்பரவி வருகிறதையும் நாம் பார்க்கிறோம். அவர்கள் நினைத்தபடி மார்க்ஸிய நூல்களைத் தடுக்கவும் முடியாமல் போயிற்று. சென்னை அரசாங்கம் சென்றகால அனுபவங்களை நினைவுகொள்ளாமல், இத்தடை விதித்தது, அவர்கள் ஆட்சிக்குக் கெட்ட பெயரைத்தான் கொண்டுவந்துதரும் என்று நாம் கவலையடைகிறோம். அறிவின்மீது தடை விதிக்கும் சென்னை சர்க்காரின் இச்செயலை நாம் வன்மையாகக் கண்டிக்காமலிருக்க முடியவில்லை. உடனே சென்னை அரசாங்கம் தவறை உணர்ந்து இத்தடை உத்தரவை எடுக்க வேண்டியது அவசர அவசியமாகும். இப்படிச்செய்ய அரசாங்கம் மறுக்குமானால் அதன் எண்ணம் பூர்த்தியாகாமல் போவதோடு, பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்த கதையாகத்தான் வந்து முடியும் என்று நாம் எச்சரிக்கிறோம்." என்று எழுதியிருக்கிறார்.

எனவே, இராமாயணத்தைப் பொறுத்தவரையில் எதாவது தடை உத்தரவு பிறப்பிப்பதானால், அது இராவண காவியத்துக்கல்ல; கம்பராமாயணத்துக்குததான் தடைவிதித்திருக்க வேண்டும். ஏனென்றால், வால்மீகி இராமாயணத்தை மொழிபெயர்த்த கம்பர், வால்மீகி இராமாயணத்தில் சொல்லப்படாத பல நிகழ்ச்சிகளைப் புதிதாகச் சேர்த்தும், அதில் சொல்லப்பட்ட பல நிகழ்ச்சிகளை மறைத்தும் கம்பராமாயணத்தைப் பாடியிருக்கிறார் என்ற உண்மை, கம்பராமாயணத்தையும் வால்மீகி இராமாயணத்தையும் ஒப்புநோக்கிப் பார்ப்பவர்க்கு நன்கு தெரியும். எனவே, இலலாததைப் புகுத்தியும் இருப்பதை மறைத்தும் எழுதப்பட்ட கம்பராமாயணத்தையன்றோ சர்க்கார் தடைசெய்திருக்க வேண்டும்.

கம்பராமாயணத்தைத் தடை செய்ய வேண்டுமென்ற எண்ணம் சர்க்காருக்கு இதுவரை ஏற்படவில்லையென்றாலும், இராவண காவியத்துக்குத் தடைவிதிக்க வேண்டுமென்ற துடிதுடிப்பு ஏற்பட்ட பின்னராவது கம்பராமாயணத்தை ஒருமுறை படித்துப் பார்த்திருக்க வேண்டும். கம்பராமாயணத்தை மட்டுமல்ல, அதன் முதல்நூலான வால்மீகி இராமாயணத்தையும் படித்துப் பார்த்திருக்கவேண்டும். இராவண காவியம் எழுதியவர் ஏன் தம்முடைய நூலில் இராவணனை நல்லவனென்றும் இராமனைக் கெட்டவனென்றும் குறிப்பிடுகின்றார் என்ற உண்மை அப்போது தெரியும். இராவண காவிய ஆசிரியருக்கு, இராவணனை நல்லவனுக்கும் வித்துக்கள் கம்பராமாயணத்திலும் வால்மீகி இராமாயணத்திலும் ஆங்காங்கு புதைந்து கிடப்பதைக் காணவும் முடியும். இதுமட்டுமல்ல, வால்மீகியால கடவுளாக்கப்படாத இரா

(2-ம் பக்கம் பார்க்க)

## இராஜாசர் அண்ணாமலைச் செட்டியார் மறைவு

செட்டிநாட்டு இராஜாசர் அண்ணாமலைச்செட்டியார் அவர்கள் சில காலமாக நோய்வாய்ப்பட்டிருந்து 15—6—48 இரவு செட்டிநாட்டிலுள்ள அவரது மாளிகையில் 67—வது வயதில உயிர் நீர்த்தார் என்ற செய்திகேட்டு வருந்துகிறோம். இராஜாசர் அவர்கள் பொதுவாழ்வில் ஈடுபட்டுப் பல பணிகள் செய்துள்ளார். அவற்றுள் முக்கியமானது அண்ணாமலைப் பல்கலைக் கழகமாகும். அவரது பிரிவால் வருந்தும் அவருடைய புதல்வர்கள் குமாரராஜா முத்தய்யாசெட்டியார், இராமநாதன் செட்டியார், சிதம்பரம்செட்டியார் ஆகியவர்களுக்கும் அவரது உறவினருக்கும் ஆறுதல் கூறுகின்றோம்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravida Nadu" Press,
95, Tirukkachinambi Street. Conjeeveram.